DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

,t;tplj;jpy;
tpsk;guk; nra;a
vk;ik mioAq;fs;
416-752-1524

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் சுதந்திர வேகம் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1589 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 18, 2026

PYRAMID GROUP
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
ROYAL LEPAGE ignite
795 MILNER AVE, TORONTO, ON M1B 3C3

FIRST MORTGAGE
SECOND MORTGAGE
REFINANCE
SUJAN SIVARAJAH 416.302.5555

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

# 2வது உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு கனடா 2026 நாளை 19ம் சனிக்கிழமை மார்க்கம் நகரில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது

கனடாவில் நீண்ட காலமாக இயங்கும் “தொல்காப்பிய மன்றம்” இரண்டாவது தடவையாக நடத்தும் “உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு-2026 நாளை 19ம் திகதி சனிக்-கிழமையும் மறுநாள் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை நடைபெறுகின்றது.

மாநாடு இரண்டு நாட்களும் நடைபெறும் மண்டபம் 100 **Donald Sim Ave, Markham,** என்னும் விலாசத்தில் அமைந்தள்ள **Bill Hogarth Secondary School** பாடசாலை ஆகும் மேற்படி மாநாட்டிற்கான ஏற்பாடுகளை மன்றத்தின் தலைவி திருமதி செல்வநாயகி ஸ்ரீதாஸ் மற்றும் இணைப்பாளரும் பேராசிரியருமான இல. சுந்தரம் ஆகியோரும் ஏனைய பல தமிழ் ஆர்வலர்களும் இணைந்து கடந்த சில மாதங்களாக செய்து வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியின் இருப்பையும் அதன் இறுக்கத்தையும் தொன்மையையும் பெருமையுடன் எடுத்துக் கூறவுள்ள இந்த மாநாட்டில் உலகின் பல நாடுகளிலிருந்தும் தமிழ் அறி-ஞர்களும் பேச்சாளர்களும் வருகைத தந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது..

மாநாட்டிற்கான தங்கள் வருகையை பதிவு செய்ய **www.tiny.cc/TRC26** என்னும் இணைப்பிற்குச் செல்லவும்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)




# "எமது பிராந்தியத்திலுள்ள பல்லின ஊடகங்களிடமிருந்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ள பீல் காவல்துறை தலைமையகம் ஆர்வமாக உள்ளது"

## பல்லின பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் பிராந்திய காவல்துறை தலைமை அதிகாரி நிசான் துரையப்பா அழைப்பு!



“எமது பிராந்தியத்திலுள்ள பல்லின ஊடகங்களிடமிருந்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக் கொள்வதில் பீல் பிராந்திய காவல்துறை தலைமையகம் மிகவும் ஆர்வமாக உள்ளது”

இவ்வாறு 16ம் திகதி புதன்கிழமை அன்று மிசிசாகா நகரில் அனைந்துள்ள பீல் பிராந்திய காவல்துறையின் தலைமைப் பணிமனையில் நடைபெற்ற பல்லின பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் பிராந்திய காவல்துறை தலைமை அதிகாரி நிசான் துரையப்பா அழைப்பு விடுத்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் பல்லின சமூகங்கள் வாழும் எமது பீல் பிராந்தியத்தில் பல்லினப் பத்திரிகையாளர்களின் சமூக ஈடுபாட்டை நாம் நன்கு அறிவோம். எனவே உங்களிடமிருந்து எமது பிராந்தியத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்கும் ஆலோசனைகளை தொடர்ச்சியாக கருத்துக்களை செவிமடுக்க நாம் ஆர்வத்துடன் உள்ளோம்” என்றார்.

மேற்படி சந்திப்பில் தமிழ் ஊடகங்கள் சார்பில் “உதயன்” லோகேந்திரலிங்கம் மற்றும் “தேசம்” பத்திரிகை சார்பில் சங்கர் சிவநாதன் மற்றும் விசு கணபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

COMMERCIAL REAL ESTATE
BUY · SELL · LEASE
Sri Nada Rajasundram
Real Estate Broker
416-276-6666
RE/MAX ACE
Let's Talk Strategy.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

G.Rajah
முள்ளிவாய்க்காலில் இருந்து...
NAM THAYAGAM
நம் தாயகம் INC
Nam Thayagam Inc.
3031, Markham Road, Unit #35, Scarbrough, ON M1X 1L9
namthyakam@gmail.com
416 558 2111

# Medcentre Health

Synchronizing Health Sectors

# Medcentre Family Clinic

## ACCEPTING NEW PATIENTS

# புதிய நோயாளர்கள்

## ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்

## Dr. விஜிதா முகுந்தன் MD, CCFP

கனடாவில் மருத்துவப்பயிற்சி பெற்று 7 ஆண்டு கனடாவில் குடும்ப மருத்துவராக பணியாற்றியவர்.

## அழையுங்கள் : 416-297-7777

**எமது மருத்துவ நிலையம் தினமும் திறந்திருக்கும்**

## எமது சேவைகள்

**Medcentre Family Clinic**
Comprehensive Care
Patient-Centred Care
For Children, Adults & Seniors
416-297-7777

**Medcentre Urgent Care**
Urgent Care Centre
Walk-In Clinic
Life Lab Collection Centre
416-297-7777

**Medcentre Pharmacy**
Same-day Home delivery
All Insurances Accepted
Pharmacist Consultation
416-609-3333

**Medcentre Women's Health Care**
Cancer Screening (Cervical & Breast)
Family Planning (Contraception)
Sexually Transmitted Infections (STI)
416-331-8888

2225 Markham Road, Ground Floor, Scarborough, ON M1B 2W4

## (Markham Rd. & Finch Ave.E)

medcentrehealth.com

உதயன் கதிரோட்டம்

# தேசத்தின் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் "அரசியல்" செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா?

ஒரு தேசத்தில் இயற்கையாகவோ அன்றி படைப்பாகவோ குவிந்து கிடக்கும் கடல் வளம் மற்றும் கனிம வளம் ஆகியவை அந்தந்த தேசத்தின் அரசுக்கும் மக்களுக்குமே சொந்தமானவை. ஆனால் இவை பற்றி எதுவும் அக்கறை கொள்ளாத பொதுமக்களில் பெரும்பகுதியினர் வாழ்க்கையில் கஸ்டங்களை அனுபவித்தாலும் இவ்வாறான கனிமக் கொள்ளை அல்லது கடல்வளத்தை சூறையாடுவது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவது இல்லை.

அதற்கு மேலாக, இயற்கையின் கொடையாகவும் அதன் படைப்பாகவும் விளங்கும் மீன்கள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள் ஆகிய கடல்வளம் மற்றும் தங்கம், வெள்ளி, உருக்கு, நிலக்கரி வேறு உலோகங்கள் தயாரிக்கக் கூடிய இன்னோரென்ன கனிமங்கள் உலகின் பல நாடுகளிலும் நிறைந்து கிடக்கின்றன.இவ்வாறு தான் கடல் வளமும். ஏழை மீனவர்கள் கடலுக்குச் சென்று தங்கள் உயிர்களை பணயம் வைத்து மீன்களை பிடித்து வர "எம்மூரின்" சம்மாட்டிகள் எனப்படும் "முதலாளிகள்" அவற்றின் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொண்டு செல்வந்தர்களாக உயர்ந்து சமூக அந்தஸ்த்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக தென்னாபிரிக்கா. நைஜீரியா மற்றும் தென்அமெரிக்க நாடுகள் ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றில் தாராளமாக கனிம வளங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் இவை பற்றி அந்தந்த நாடுகளில் வாழும் சாதாரண மக்களோ அன்றி ஆர்வம் குறைந்தவர்களோ கவலைப்படுவதில்லை. இதனால் அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் கனிம வளங்கள் தொடர்பாகவோ அன்றி சட்டங்கள் தொடர்பாகவோ நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் பல விலையுயர்ந்த கனிம வளங்களைக் தம்மகத்தே கொண்டிருந்தாலும் அவைபற்றிய வர்த்தக வாய்ப்புக்கள் பற்றிய ஆர்வம் கொண்டட பிறநாட்டு செல்வந்தர்கள் அல்லது பல்தேசிய நிறுவனங்கள் அந்த நாடுகளின் அரசியல்வாதிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் அமைச்சர்களையும் ஏதோ வகையில் தொடர்பு கொண்டு நெருக்கமான உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் செய்து அந்தந்த நாடுகளில் உள்ள கனிம வளங்களை அகழ்ந்து எடுக்கும் பாரிய திட்டங்களை தங்கள் கைகளுக்குள் எடுத்து அந்த நாட்டின் சாதாரண மக்களுக்கும் கிடைக்க வேண்டிய சலுகைகள் அல்லது பயன் ஆகியவற்றை மறைத்து பிறநாட்டவர்கள் அதன் அதிக பலன்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால் அந்தந்த நாடுகளின் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இதனால் கிடைக்கும் பெரும் நிதியைக் கொண்டு தங்களை செல்வந்தர்களாக உயர்த்திக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒரு நாட்டில் நூறு பேர் இந்த மோசடிகளுக்கு பக்கத்துணையாக இருந்து சமூகத்தில் பணபலம் உள்ளவர்களாக உயரத்தை எட்டுகின்றார்கள். ஆனால் அந்த நாட்டின் ஏழை அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் தொடர்ந்து ஏழைகளாகவே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

இவ்வாறு அந்தந்த நாடுகளில் உள்ள சாதாரண மக்கள் வாழ்க்கையின் அடிமட்டத்திலேயே எவ்வித வசதியும் இன்றி கஸ்டங்களை அனுபவிக்க, மறுபக்கத்தில் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இவ்வாறாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்து தங்கள் அரசியல் பலத்தையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இதன் காரணமாகவே இம் மாதத்தின் எமது தேசக்குரலில் நாம் இந்த மறைந்து கிடக்கும் கிடக்கும் சட்ட விரோத செயல்களையும் ஊழல் விடயங்களையும் பற்றி எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். இதனாலேயே வடக்கினதும் கிழக்கினதும் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா? என்ற கேள்வியை முன்வைக்கின்றோம்.

நாம் அறிந்த வகையில் இலங்கையிலும் கனிமக் கொள்கை மற்றும் சுரங்க அகழ்வு உரிமங்கள் தொடர்பாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பான சட்ட திட்டங்கள் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளன.

முன்னைய மகிந்தாவின் ஆட்சிக் காலத்திலும் பின்னர் கோட்டாபாய ஆட்சியின் காலத்திலும் மற்றுமொரு ஊழல்வாதி நாமல் ராஜபக்ச வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அதிகளவு நிதியை அவர்களிடமிருந்து பெற்று கோடிக்கணக்கான டாலர்களை சுருட்டிக் கொண்டார் என்பதும் தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள்.

இலங்கையில் கனிம ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள், குறிப்பாக புதுப்பிக்க முடியாத கனிம வளங்களை அகழ்ந்தெடுப்பதன் மூலம் ஏற்படும் மீட்டெடுக்க முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் அச்சம் மற்றும் எதிர்ப்புகளை சுட்டிக்காட்டிவரும் பல சமூக ஆர்வலர்களும் அமைப்புக்களும் உள்ள நிலையில் அவர்களை தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து அடக்கியும் சிறையில் அடைத்தும் அல்லது கொலைப் பயமுறுத்தல் செய்தும் ஊழல்வாதிகள் தங்கள் "திருட்டுக்களை" தொடர்ந்து வருகின்றார்கள்.

சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட நீண்ட காலத்திற்குப் பின்னரும் நிலச்சரிவுகள், விவசாய உற்பத்தித் திறன் இழப்பு, நீர் வளங்கள் வற்றிப்போதல், சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிவு மற்றும் பல்வேறு சூழலியல் பாதிப்புகள் போன்ற நீண்டகால விளைவுகளை பாதிக்கப்பட்ட சமூகங்களே சுமக்க வேண்டியு நிலை சாதாரண மக்களுக்கே ஏற்படுகின்றன. பாதுகாப்பான இடங்களில் தங்கள் மாளிகைகளைக் கட்டி வாழும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இயற்கை அனர்த்தங்களால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.இந்தியாவில் சென்னை போன்ற நகரங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். எந்த ஒரு அரசியல்வாதியும் வெள்ளப்பெருக்கால் சிரமங்களை சந்திப்பதில்லை. ஆனால் மக்களைச் சந்திக்க விலை உயர்ந்த வாகனங்களில் அல்லது வானூர்திகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருவார்கள்.

அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்த கனிம வளக்கொள்ளைகளை தடுக்கும் கனிமக் கொள்கை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நீண்ட உரையாற்றியுள்ளார். அத்துடன் அவர்கள் இந்த விடயம் தொடர்பான அமைச்சரிடம் பல கேள்விகளையும் தொடத்துள்ளார்.

இனிவரும் நாட்களில் நாமும் இந்த விடயம் தொடர்பான விடயங்களில் ஆர்வத்துடன் எமது அவதானிப்பை செலுத்த வேண்டும் என்றும் தேசத்தின் சொத்தை தனி நபர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் "சூறையாடுவதை" தடுக்க போராட வேண்டும் என்றும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.!

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers
- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

Kjyhd rfytpjkhd Neha;fSf;Fk;
Mrs. K. Vasanthakumar
Acupuncturist (R.A.C)
njhlh;Gnfhs;sTk;.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

## Room for Rent

**McCowan & 401** அருகில், **Luxury 2 Bed, 2 Bath Condo** ல் ஒரு தனி அறை **with separate bathroom, Aug 1, 2026** முதல் வாடகைக்கு உள்ளது**. Share the kitchen & living area with a Tamil senior male. Gym, Swimming pools, Tennis, BBQ area, and more. Preference given to single Tamil male. Contact. 647 273 2053**

## Ntiy tha;g;G

njhopw;rhiy xd;wpy; Ntiy nra;tjw;F ngz;fs; Njit.
njhlh;GfSf;F: 647-669-2739

## Basement Apartment for Rent

**One-bedroom basement Apartment (Bungalow House) available immediately. All Utilities. included, Separate entrance & one parking spot. Ideal for One person or a couple. A senior citizen lives on the main level. Located near Ellesmere Rd & Orton Park Rd. Please contact for more details. at 416 230 6462**

கனடிய செய்திகள்
Canadian News

Point. Pedro: Viyaparimoolai Nellandai Association hosted it's 27th Annual Summer Get Together at Milliken Park

# கனடா — வியாபாரிமூலை நெல்லாண்டை மக்கள் அமைப்பு தனது 27வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடல் நிகழ்வை, மில்லிகன் பூங்காவில் நடத்தியது



கனடாவில் வசிக்கும் பருத்தித்துறை பிரதேசத்தின் வியாபாரிமூலை நெல்லாண்டை மக்கள், கோடை மற்றும் குளிர்காலங்களில் ஒன்றுகூடி தங்கள் நட்பையும் உறவையும் வலுப்படுத்தவும் தாயகத்தில் உள்ள மக்களுக்கு உதவிகள் வழங்கும் நோக்கத்திற்காகவும் 1999-ஆம் ஆண்டில் "வியாபாரிமூலை நெல்லாண்டை சங்கம்" நிறுவப்பட்டது. இதன் நிறுவன உறுப்பினர்களாக ஆர்.சுந்தரலிங்கம், காலஞ்சென்ற எஸ்.பூரணச்சந்திரன், என்.பாலச்சந்திரன், எம். ஆனந்தகிருஷ்ணன் மற்றும் சிலர் திகழ்கின்றனர்.

இச்சங்கத்தின் 27-வது வருடாந்த கோடைக்கால ஒன்றுகூடல் நிகழ்வு, 2026-ஆம் ஆண்டு செப்டம்பர் 12-ஆம் தேதி சனிக்கிழமையன்று மில்லிகன் பூங்காவில் (Milliken Park) உள்ள "ஷெல்டர் சூ1"-இல் (Shelter #1) நடைபெற்றது. அன்றைய தினம் உறுப்பினர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் அனைவரும் அங்கு கலந்து கொண்டு ஒன்றாக பல மணி நேரத்தைக் கழித்தும் உணவருந்தியும்



பின்னர் விளையாட்டு மற்றும் பொழுது போக்கு அம்சங்கள் ஆகியவற்றில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டனர். அன்றைய தினம் தனது நண்பரான "உதயன்" (Canada Uthayan) பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கத்தை, தலைவர் திரு. சுந்தரலிங்கம் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் அழைத்ததன் மூலம் அவர் அங்கு கலந்து கொண்டு சங்க உறுப்பினர்களோடு மகிழ்ச்சியுடன் உரையாடிச் சென்றார். அங்கு இடம் பெற்ற கரப்பந்தாட்டம் அனைவரையும் கவர்ந்தது என்றால் அது மிகையாகாது.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

'ChiDAES-Canada' hosted it's 21st Annual Gathering with presenting Community Services Award for year 2026!

# ChiDAES-Canada — கிழக்கிலங்கை மாணவர் கல்வி மேம்பாட்டுக்காக நிறுவப்பட்ட அமைப்பின் 21வது ஆண்டு ஒன்றுகூடலில் சமூக சேவை விருதுகளையும் வழங்கியது

கனடாவில் வாழும் கிழக்கிலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட சமூக அக்கறை கொண்ட புத்திஜீவிகள் இணைந்து ஆரம்பித்த ChiDAES-Canada என்று அழைக்கப்பெறும் கிழக்கிலங்கை மாணவர் கல்வி மேம்பாட்டுக்காக நிறுவப்பட்ட அமைப்பின் 21வது ஆண்டு ஒன்றுகூடலில் சமூக சேவை விருதுகளையும் வழங்கி மேலும் மாணவர்களின் நலன்களைக் கவனிக்க நிதிசேர் ஏலம் இடும் நிகழ்வையும் நடத்தியது.

மேற்படி வைபவத்தை பல நோக்கங்களுடன் நடத்துவதில் அமைப்பின் தலைவர் விஜயரட்ணம் அவர்கள் செயலாளர் சசி சசீந்திரன் அவர்கள் மற்றும் பொருளாளர் ஜீவா மாணிக்கம் அவர்கள் மற்றும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்கள் அவர்களுடன் அனைவரதும் குடும்ப உறுப்பினர்கள் என அனைவரும் ஒன்றிணைந்த இந்த சமூக நோக்கம் கொண்ட ஒரு மாலை ஒன்றுகூடலை சிறப்பாக நடத்தினர்.

மேற்படி நிகழ்வு 2259 Jane Street, North York, என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Church of St. Stephen, தேவாலய மண்டபத்தில் கடந்த 12ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவின் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி அமெரிக்கா வாழ் நந்தகுமார் அழைக்கப்பெற்றிருந்தார். அன்றைய தினம் சமூக சேவை விருதுகள் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பெற்ற இருவரில் சமூக சேவையாளர் வசந்தகுமார் தம்பிராஜா (பாபு) மற்றும் எழுத்தாளரும் கவிஞரும் பத்திரிகையாளருமான நாகமணி லோகேந்திரலிங்கம் ஆகிய















இருவருக்கும் மேடையில் பாராட்டுக் கேடயங்கள் வழங்கப்பெற்றன. அவர்கள் பற்றிய அறிமுக உரைகளை முறையே சசி சசீந்திரன், விசு கணபதிப்பிள்ளை ஆகியோர் வழங்கினார்கள்.

விழா நிகழ்ச்சிகளை பிரபல அறிப்பாளரும் சமூக அக்கறை கொண்டவருமான சஞ்சேய் அவர்கள் தொய்வு எதுவுமின்றி தொகுத்து வழங்கினார்.





இறுதியில் நடைபெற்ற மாணவர்களின் நலன்களைக் கவனிக்க நிதிசேர் ஏலம் இடும் நிகழ்வில் சேகரிக்கப்பட்ட தொகை பத்தாயிரம் டாலர்களை எட்டியிருந்த வேளையில் பரிசுப் பொதியை அதிஸ்டவசமாகப் பெற்றுக் கொண்ட மதிபாஸ்கரன் அவர்கள் அந்தப் பொதியை ChiDAES-Canada அமைப்பினருக்கே திரும்பவும் வழங்கிய நிலையில் அந்தப் பொதி மீண்டும் 500 டாலர்களுக்கு அதிஸ்டசாலெ ஒருவருக்கு வழங்கப்பெற்றது.

கலை நிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் உட்படட பல பயனுள்ள ஒன்றுகூடலாக விளங்கிய இந்த மாலை நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

# அவசியமான தருணங்களில் தகுந்த ஆலோசனை வழங்க எவருமற்றவராக விளங்கும் மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் க.ஜெசீதன்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

G. f[pe;jd;



மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அண்மையில் நிகழ்வு ஒன்றில் நடந்துகொண்ட விதம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், அண்மையில் மானிப்பாய் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கட்டுடை பகுதியில் உள்ள வீதி ஒன்றின் புனரமைப்பு பணிகளுக்காக அடிக்கல் நாட்டும் வைபவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் தவிசாளர் கந்தையா ஜெசீதன் காலணிகளை கழற்றாமல் மங்கல விளக்கேற்றி வைத்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

மானிப்பாய் பிரதேசத்தின் முதற் குடிமகனாக உள்ள தவிசாளர் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் காலணியுடன் மங்கல விளக்கேற்றி வைத்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு சமூக ஆர்வலர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

fdfuhrh rutzd;;

# தமிழரசுக் கட்சியின் சி.வி.கே சிவஞானம், எம்.ஏ. சுமந்திரன் உட்பட்ட 4 பேருக்கு எதிராக முன்னாள் எம்.பி. அரியேந்திரன் மட்டக்களப்பு நீதிமன்றில் வழக்கு தாக்கல்

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தன்னை கட்சியில் இருந்து நீக்கியமைக்கு எதிராக தமிழரசுக் கட்சியின் தற்போதைய பதில் தலைவர், பதில் செயலாளர், முன்னாள் செயலா-ளர், உள்ளிட்ட 5 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை எதிர்வரும் டிசம்பர் 16ம் திகதிக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி 16ம் திகதி அன்று புதன்கிழமை ஒத்திவைத்தார்.





கடந்த 2024 டிசம்பர் 28ம் திகதி கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரனை தமிழரசு கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாக தீர்மானம் எடுக்கப்பட்டதாக அப்போது கட்சியின் செயலாளராக இருந்த சத்தியலிங்கம் அறிவித்தார் இருந்தபோதும் அதற்கான கடிதம் தனக்கு கிடைக்கவில்லை என அரியேந்திரன் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் இப்போது உள்ள கட்சியின் பதில் செயலாளர் எம்.சுமந்திரன் கடந்த 2024 மத்திய குழுவில் அரியேந்திரனை கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கட்சியில் இருந்து நீக்கியதாக 2026 ஜனவரி 9 திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றை அரியேந்திரனுக்கு அனுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் கட்சியின் மத்திய குழு, மட்டக்களப்பு மாவட்ட கிளை உப தலைவர், பட்டிருப்பு தொகுதி உப தலைவர், பட்டிப்பளை பிரதேச கிளை உப தலைவராக செயற்பட்டுவந்த தன்னை கட்சியின் உப விதிகளுக்கு முர-ணாக கட்சியில் இருந்து நீக்கியது சட்டவிரோதமானது என கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே சிவஞானம், உப செயலாளர் எம். சுமந்திரன், மற்றும் முன்னாள் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், மற்றும் தமிழரசுக் கட்சிக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி பிரேம்நாத் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்காக 16ம் திகதி அன்று புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் எடுக்கப்பட்டதையடுத்து வழக்கை எதிர்வரும் டிசம்பர் 16 ம்திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் வேலணையில் மீண்டும் அதிகரிக்கும் மாட்டு திருட்டுக்கு காரணம் — அவற்றைக் கட்டி வளர்க்காததே என்று தவிசாளர் தெரிவிப்பு!



வேலணை பிரதேச சபையுன் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் மாட்டு திருட்டு உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் மீண்டும் அதிகரித்து வருவதாகவும், திருட்டு தொடர்பில் பொதுமக்கள் ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை முன்வைத்தபோதும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் காலதாமதம் செய்வதாகவும் சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு 16ம் திகதி புதன்கிழமை அன்று தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே பிரதேசத்தில் அதிகரித்துள்ள மாட்டு திருட்டு தொடர்பில் உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

வேலணை பிரதேசத்தில் கால்நடைகளை வளர்த்து வரும் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், வேலணையில் அண்மைக்காலமாக வளர்ப்பு மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

இதனால் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மக்கள் பெரும் பாதிப்புகளையும் பொருளாதார இழப்பையும் எதிர்கொள்வதாகவும் தெரிவித்தார்.

மேலும் மாடுகள் காணாமல் போனமை தொடர்பில் உரிமையாளர்களால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருவதாகவும், சில சந்தர்ப்பங்களில் மாடுகள் திருடிதவர்களது ஆதாரங்களையும் பொதுமக்கள் பொலிஸாரிடம் முன்வைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுப்பதில் பின்னடிப்பதாகவும், முறைப்பாடுகளைப் பதிவு செய்வதிலும் விசாரணைகளை முன்னெடுப்பதிலும் காலதாமதம் ஏற்படுவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிப்பதாக உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் சபையில் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உள்ளூராட்சி நிறுவனமாக பிரதேச சபை செயற்படுவதால், கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் இப்பிரச்சினை தொடர்பில் சபையும் உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது, மாடுகள் திருடப்படுவதைத் தடுப்பதற்காக அவற்றை முறையாகக் கட்டி வளர்க்க வேண்டும் என்ற வகையில் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் பதிலளித்திருந்தார்.

தவிசாளரின் இந்தப் பதில் பிரச்சினையின் தீவிரத்தன்மைக்கு உரிய தீர்வாக அமையாது எனக் கூறி பண்ணையாளர்கள் மத்தியில் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

தமது வாழ்வாதாரத்தின் முக்கிய ஆதாரமாக கால்நடைகளை வளர்த்து வரும் நிலையில், மாடுகளை திருடிச் செல்லும் நபர்களை அடையாளம் கண்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, மாடுகளை கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்துவது நடைமுறைச் சிக்கல்களுக்கு தீர்வாக அமையாது என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வேலணைப் பிரதேசத்தில் மாட்டு திருட்டு என்பது புதிதாக உருவாகியுள்ள பிரச்சினையல்ல எனவும், நீண்டகாலமாக கால்நடைகளை சட்டவிரோதமாக கடத்துதல், கட்டிவைக்கப்பட்ட நிலையில் திருடப்பட்ட மாடுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்தல், இறைச்சியாக்குதல் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறிப்பாக, தங்களது கால்நடைகள் காணாமல் போகும் சந்தர்ப்பங்களில் உரிமையாளர்கள் பெரும் பொருளாதார இழப்பை எதிர்கொள்வதாகவும், சிலர் தமது குடும்ப வாழ்வாதாரத்திற்காக வளர்த்து வந்த மாடுகளையே இவ்வாறு இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்பு மூலம் வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு ஒரு மாடு என்பது வெறுமனே கால்நடை என்ற நிலையைத் தாண்டி அவர்களின் வாழ்வாதாரச் சொத்தாக காணப்படுகிறது.

எனவே, மாடுகள் திருடப்படும் சம்பவங்களை சாதாரண சம்பவங்களாகக் கருதாமல், அவற்றின் பின்னணியில் செயற்படும் திருட்டுக் குழுக்கள் மற்றும் சட்டவிரோத கால்நடை வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

மேலும், திருடப்பட்ட கால்நடைகள் எவ்வாறு கொண்டு செல்லப்படுகின்றன, அவை எங்கு விற்பனை செய்யப்படுகின்றன, இறைச்சியாக்கப்படுகின்றனவா, அவற்றின் சட்டவிரோத விற்பனைக்கு பின்னால் உள்ளவர்கள் யார் என்பன தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்துகின்றனர்.

பொதுமக்கள் ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை முன்வைக்கும் நிலையில், அவற்றை உரிய முறையில் பதிவு செய்து, சம்பவ இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவது பொலிஸாரின் பொறுப்பாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, வேலணை பிரதேச சபை, பொலிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் இணைந்து கால்நடை திருட்டை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வடக்கில் அதிகூடிய வெப்பநிலை காரணமாக வடமராட்சி கிழக்கில் மீன்கள் இறந்து மிதக்கின்றன!

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி கடல் நீரேரிப் பகுதியில் அதிகளவான நன்னீர் மீன்கள் இறந்த மிதக்கின்றன. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு பகுதியில் நன்னீர் மீன்பிடியை நம்பியுள்ள 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்னீர் மீன்பிடித் தொழிலை இழந்துள்ளனர். அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள எல் லினோ காலநிலை காரணமாக அதிக வெப்பம் ஏற்பட்டுள்ளமையால் பல்வேறு இடங்களிலும் நன்னீர் மீனினங்கள் இறந்து மிதக்கிறமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்கு செல்லும் வழிகாட்டல் பலகை இடித்து ஒழிக்கப்பட்டமைக்கு நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு கண்டனம்!



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு முற்றத்திற்கு செல்வதற்கான வழிகாட்டும் பலகை பரந்தன் முல்லைத்தீவு வீதியில் பொருத்தப்பட்டிருந்த நிலையில் அதனை அகற்றுவதற்கு போலீசாரால் நீதிமன்றத்தின் உத்தரவு பெறப்பட்டு குறித்த வழிகாட்டல் பலகை வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அகற்றப்பட்டுள்ளது. இதற்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. அதன் முழு விவரம் வருமாறு.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு - வடக்கு கிழக்கு

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவேந்தல் முற்றத்தின் வழிகாட்டிப் பலகை இடித்தழிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய தமிழினப் படுகொலையை நினைவேந்துவதற்கான முள்ளிவாய்கால் முற்றத்திற்கு செல்வதற்கான பாதையை சுட்டிக் காட்டுவதற்காக முல்லைத்தீவு பரந்தன் வீதியில் அமைக்கப்பட்டிருந்த வழிகாட்டிப் பலகை கடந்த 2026.09.14 அன்று முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை காரணம் காட்டி வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இடித்தழிக்கப்பட்டுள்ளமையானது அரச திணைக்களங்கள் ஊடாக தமிழினம் மீதான ஒடுக்குமுறைகள் தடையின்றி தொடர்வதனையே காட்டி நிற்கின்றது.

வகை தொகையின்றி தமிழினம் கொத்துக் குண்டுகளாலும், இன்னும் உலகில் மனித குலத்திற்கெதிரானதென தடைசெய்யப்பட்ட ஆயுதங்களாலும், போர் முறைகளாலும் திட்டமிட்டு அழித்தொழிக்கப்பட்ட இனப்படுகொலையை கண்ணீரோடு நினைவுகூரும் உரிமை தமிழினத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது என்பதை காட்டி நிற்கும் ஒன்றாகவே இவ் வழிகாட்டல் பலகையின் இடித்தழிப்பு அமைந்துள்ளது.

முல்லைத்தீவு பரந்தன் வீதியின் வீதியோரங்கள் நெடுகிலும் இராணுவ முகாம்களிற்கான பெயர்ப்பலகைகளும், காவலரண்களும் அனுமதியற்ற கட்டடங்களாகவும், கட்டமைப்புக்களாகவும், அமைக்கப்பட்டுள்ளமை வெளிப்படையானதொன்றாகும். இடித்தழிக்கப்பட்ட இவ் வழிகாட்டல் பலகைக்கு அப்பால் சில 100ஆ தூரம் தள்ளி முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமின் பெயர் பொறிக்கப்பட்ட கட்டமைப்பு, இதே வீதியில் புக்குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ வெற்றிச் சின்னம் போன்ற இன்னும் பல கட்டுமானங்கள் அனுமதியற்ற கட்டுமானங்களாகவே உள்ளன.

இந்நிலையில் இவ்வழிகாட்டி, அனுமதியற்ற கட்டடம் என முல்லைத்தீவு பொலிசாரால் கடந்த 2026.06.11 இல் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தொடுக்கப்பட்ட B/692/2026 இலக்க வழக்கின் மீதான கட்டளையாகவே இவ்வழிகாட்டி அமைப்பை அகற்றுமாறு பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றால் கட்டளை வழங்கப்பட்டது.

ஏற்கனவே முல்லைத்தீவு பொலிசாரால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இவ்வழிகாட்டிப் பலகை மேல் அமைக்கப்பட்டிருந்த "காயமடைந்த பாடசாலைச் சிறுவன் ஒருவன் இரத்தம் தோய்ந்த ஆடையுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்திற்கு செல்லும் பாதையை சுட்டிக்காட்டுவது போல்" அமைக்கப்பட்டிருந்த சிலையை அகற்றுவதற்காக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்ட போதிலும், நீதிமன்றினால் அச்சிலையை அகற்றுவதற்கான கட்டளை வழங்கப்படவில்லை. இருந்த போதிலும் இரவோடிரவாக இனந்தெரியாதோரால் அச்சிலை அகற்றப்பட்டது.

தற்போதைய நிலையில் இலங்கைப் பொலிசாரின் ஆதரவுடன் இந்த முள்ளிவாய்கால் முற்ற வழிகாட்டல் கல்லும் அகற்றப்பட்டிருக்கின்றது. இந்த வகையில் இலங்கையில் எந்த அரசு ஆட்சிப்பீடம் ஏறினாலும் தமிழர் விரோத செயற்பாடுகளையும், தமிழின அழிப்பு செயற்பாடுகளையும் கட்டமைக்கப்பட்ட வகையில் அரங்கேற்றி வருவது வெள்ளிடைமலை. ஆகவே இலங்கை அரசுடைய இத்தகைய செயற்பாடுகளை நாங்கள் வன்மையாக கண்டிப்பதுடன், தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு விரைந்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றோம்.

அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் இணைத்தலைவர்

அகத்திகள் அடிகளார் தென்கையிலை ஆதீனம் இணைத்தலைவர்.

# "மக்கள் பிரதிநிதிகள்" என்ற போர்வையில் "ராஜபக்சாக்கள்" தங்கள் ஆட்சியில் நடத்திய "அரச நிதிப் பெருங்கொள்ளை"




## அதற்குள் அடங்கும் 'குட்டிக் கொள்ளையன்" நாமல் ராஜபக்சவின் Airbus விவகாரம்

SLPP நாடாளுமன்ற உறுப்பினரும், ராஜபக்ச அரசியல் குடும்பத்தின் அடுத்த வாரிசாகக் கருதப்படுபவருமான "கொள்ளையன்" நாமல் ராஜபக்ச ஒரு பணத்தாசை பிடித்த பேய் மாத்திரமல்ல; கொலைவெறி கொண்ட கொடியவன். தந்தையின் ஆட்சிக் காலத்தில் தன்னை ஒரு குட்டி ராஜாவாகக் காட்டிக்கொண்டவன். என்பது குறிப்பிடத்தக்கது.

2013ஆம் ஆண்டின் சர்ச்சைக்குரிய Airbus விமான கொள்முதல் ஒப்பந்தத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ரூ.100 மில்லியன் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில், செப்டம்பர் 4ஆம் தேதி கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு இன்னும் சிறையில் தான் உள்ளார்.

இந்த விசாரணையை இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு (CIABOC) ஆரம்பித்துள்ளது. முன்னைய ஆட்சியின் செல்வாக்கு மிக்கவர்களுடன் தொடர்புடைய உயர்மட்ட ஊழல் குற்றச்சாட்டொன்றை அரச அமைப்பு தீவிரமாகத் தொடர்ந்து விசாரிப்பது இலங்கையில் அரிதான சம்பவமாகும் என கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

இந்த வழக்கு பல காரணங்களால் முக்கியமானது என அவர் எழுதுகிறார். முதலில், ஊழலின் பரவலான தன்மையும் அதன் நிதி விளைவுகளும். உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் SriLankan Airlines அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டதாகக் கூறப்படும் சுமார் US$2 மில்லியன் லஞ்சம் மட்டுமல்லாமல், பின்னர் அதே கொள்முதல் ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்காக இலங்கை சுமார் US$115 மில்லியன் செலுத்தியதாகவும், அதே ஒப்பந்தத்தின் கீழ் வாங்கப்பட்ட இரண்டு பழைய விமானங்களுக்கு சந்தை மதிப்பை விட சுமார் US$50 மில்லியன் அதிகமாக செலுத்தியதாகவும் கட்டுரை கூறுகிறது.

இரண்டாவது அம்சமாக, பழைய ஆட்சியுடன் தொடர்புடையவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பாதுகாத்துக்கொண்டதாக ஆசிரியர் கடுமையான கருத்தை முன்வைக்கிறார். இந்த குற்றச்சாட்டுகள் 2020ஆம் ஆண்டில் பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் மேற்கொண்ட யுசைடிரள நிறுவனத்தின் இலஞ்சம் மற்றும் ஊழல் நடைமுறைகள் தொடர்பான விசாரணைகளின் போது வெளிச்சத்துக்கு வந்ததாக அவர் குறிப்பிடுகிறார். பின்னர் யுசைடிரள நிறுவனம் சுமார் US$4 பில்லியன் அபராதம்/தீர்வு தொகை செலுத்த ஒப்புக்கொண்டது என்றும் கட்டுரை கூறுகிறது.

மூன்றாவது அம்சமாக, இலங்கை அரசியலில் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஒருவரை "அரசியல் பலியாக" அல்லது "நாயகனாக" மாற்றும் வழக்கமான அரசியல் நாடகம் இருப்பதாக ஆசிரியர் விமர்சிக்கிறார். இங்கு பயன்படுத்தப்பட்ட "crook" போன்ற சொற்கள் கட்டுரையாசிரியரின் கருத்துச் சொற்கள்; நீதிமன்றத் தீர்ப்பு அல்ல.

நான்காவது அம்சமாக, தற்போது நடைபெறும் விசாரணைகளின் நம்பகத்தன்மையை ஆசிரியர் பேசுகிறார். இந்த விசாரணைகள் Airbus நிறுவனத்துடனும், பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்க சட்ட அமுலாக்க அதிகாரிகளுடனும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிடுகிறார். அதேவேளை, இலங்கையின் உள்நாட்டு அரசியல் அவதூறுகள் மற்றும் தவறான தகவல்கள் சுயாதீன நிறுவனங்களின் நம்பகத்தன்மையை பாதிக்கக்கூடும் என்றும் கூறுகிறார். குறிப்பாக CIABOC போன்ற நிறுவனங்களை அரசியல் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க வேண்டுமென்ற கருத்தையும் முன்வைக்கிறார். சிங்கப்பூரைப் போன்ற வலுவான அவதூறு சட்டங்கள் இருக்க வேண்டும் என்பதும் ஆசிரியரின் கருத்தாக இடம்பெறுகிறது.

### Airbus ஒப்பந்தம் – கட்டுரையில் விவரிக்கப்பட்ட பணப்பாதை

2013ஆம் ஆண்டில் SriLankan Airlines, பிரான்சின் Airbus நிறுவனத் திடமிருந்து மொத்தம் 16 விமானங்களை வாங்கவும் குத்தகைக்கு எடுக்கவும் ஒப்பந்தம் செய்ததாக கட்டுரை கூறுகிறது.

CIABOC குற்றச்சாட்டின்படி, ஒவ்வொரு விமானத்திற்கும் US$1 மில்லியன் லஞ்சம் வழங்கும் ஏற்பாடு இருந்ததாக கூறப்படுகிறது.

பின்னர் இரண்டு விமானங்கள் வாங்கப்பட்டதையடுத்து, Airbus நிறுவனம் சுமார் €1.45 மில்லியன், அப்போது சுமார் US$2 மில்லியனுக்கு சமமான தொகையை, Singapore Standard Chartered Bank-ல் பராமரிக்கப்பட்ட BIZ Solutions Inc. கணக்கிற்கு மாற்றியதாக விசாரணையாளர்கள் கூறியுள்ளனர்.

BIZ Solutions Inc. நிறுவனத்தின் parent company Brunei-ல் பதிவு செய்யப்பட்டதாகவும், அதன் ஒரே director ஆக Priyanka Niyomali Wijenayake இருந்ததாகவும், இவர் முன்னாள் SriLankan Airlines CEO Kapila Chandrasenaவின் மனைவி என்றும் கட்டுரை குறிப்பிடுகிறது.

நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தகவல்களின் படி, BIZ Solutions Inc. கணக்கிலிருந்து €400,000 மற்றும் AU$200,000, Kapila Chandrasena-வின் தனிப்பட்ட Commonwealth Bank of Australia கணக்கிற்கு மாற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

அதே கணக்கிலிருந்து மேலும் €168,400, "SL Agro" எனப்படும் Singapore நிறுவனத்திற்கு மாற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அந்த SL Agro நிறுவனம் பின்னர் மூன்று தனித்தனி சந்தர்ப்பங்களில் ரூ.9 மில்லியன், ரூ.7 மில்லியன் மற்றும் ரூ.2 மில்லியன் தொகைகளை "Sasisi Media" என்ற நிறுவனத்திற்கு மாற்றியதாக கட்டுரை கூறுகிறது.

Sasisi Media நிறுவனம், முன்னாள் சபாநாயகர் Chamal Rajapaksa-வின் இளைய மகனான Shamendra Rajapaksaவிற்கு சொந்தமானதாக கட்டுரை கூறுகிறது.

அப்போது SriLankan Airlines நிறுவனத்தின் director ஆக இருந்த Shamendra Rajapaksa மேலும் நேரடியாக ரூ.6 மில்லியன் பெற்றதாக விசாரணையாளர்கள் குற்றஞ்சாட்டியதாகவும், மொத்தத்தில் அவர் சுமார் ரூ.25 மில்லியன் லஞ்சப்பணம் பெற்றதாக விசாரணை தரப்பு கூறியதாகவும் கட்டுரை குறிப்பிடுகிறது.

### US$800,000 – Nimal Perera – Namal Rajapaksa தொடர்பு

BIZ Solutions கணக்கிலிருந்து இரண்டு தனித்தனி பணப் பரிவர்த்தனைகளாக மொத்தம் US$800,000, Singapore OCBC Bank-ல் பராமரிக்கப்பட்ட Sabre Vision Holdings Ltd. என்ற நிறுவனக் கணக்கிற்கு மாற்றப்பட்டதாக விசாரணையாளர்கள் கண்டறிந்ததாக கட்டுரை கூறுகிறது.

அந்த நிறுவனத்தின் உரிமையாளர் தொழிலதிபர் Nimal Perera என குறிப்பிடப்படுகிறது.

Nimal Perera தற்போது Australia-வில் வசிப்பதாகவும், இலங்கைக்கு திரும்ப மறுத்ததாகவும் கட்டுரை கூறுகிறது.

அவர் அளித்த யககனையளவை ஒன்றில், ரூ.100 மில்லியனை நாமல் ராஜபக்சவிடம் தாம் நேரடியாக பணமாக ஒப்படைத்ததாக கூறியுள்ளார் என்று கட்டுரை குறிப்பிடுகிறது.

### Airbus நிறுவனத்தின் ஒத்துழைப்பு

Airbus நிறுவனம் இலங்கை விசாரணைக்கு ஒத்துழைத்துள்ளதாக கட்டுரை கூறுகிறது.

Airbus அதிகாரிகள் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்து, நான்கு வாக்குமூலங்களை வழங்கியதுடன், இலங்கையுடன் தொடர்புடைய அதிகாரப்பூர்வ ஆவணங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் வங்கி கணக்கு பதிவுகள் அனைத்தையும் விசாரணையாளர்களிடம் வழங்கியதாக குறிப்பிடப்படுகிறது.

Priyanka Niyomali Wijenayake ஜாமீன் பெற்ற பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் Australia-வில் வசிப்பதாக கட்டுரை கூறுகிறது.

Shamendra Rajapaksa அமெரிக்காவில் வசிப்பதாகவும், Nimal Perera Australia-வில் இருப்பதாகவும் குறிப்பிடுகிறது.

Wijenayake மற்றும் Shamendra Rajapaksa ஆகியோரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் கட்டுரை கூறுகிறது.

Nimal Perera affidavit குறித்து ஆசிரியர் எழுப்பும் சந்தேகம்.

Namal Rajapaksa மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் முக்கிய வலிமை Nimal Perera அளித்த affidavit-ன் நம்பகத்தன்மையில் பெருமளவு தங்கியுள்ளது என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

Nimal Perera ராஜபக்ச குடும்பத்திற்கு நெருக்கமானவர் எனவும் கட்டுரை சொல்கிறது.

அதேவேளை, Nimal Perera-வின் நிறுவனக் கணக்கிற்கு US$800,000 சென்றதாக விசாரணை கூறும் நிலையில், அந்தப் பணம் தொடர்பாக அவரிடம் போதுமான பொறுப்புக்கூறல் கோரப்படவில்லை என்பது குறித்து ஆசிரியர் கேள்வி எழுப்புகிறார்.

### 2020 Airbus சர்வதேச ஊழல் விவகாரம்

Airbus நிறுவனத்துடன் தொடர்புடைய உயர்மட்ட ஊழல் விவகாரம் 2020ஆம் ஆண்டில்தான் பெருமளவில் வெளிப்பட்டதாக கட்டுரை கூறுகிறது.

Airbus நிறுவனம் Sri Lanka, Malaysia, Indonesia, Taiwan மற்றும் Ghana உள்ளிட்ட நாடுகளில் விமான ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக அரசியல்வாதிகள் மற்றும் விமான நிறுவன அதிகாரிகளுக்கு பல மில்லியன் டாலர்கள் அளவில் தவறான பணம் வழங்கியதாக சர்வதேச விசாரணைகளில் வெளிவந்தது என்று ஆசிரியர் எழுதுகிறார்.

France, UK மற்றும் US ஆகிய நாடுகள் Airbus நிறுவனத்தின் 2006 முதல் 2016 வரையிலான சட்டவிரோத வணிக நடைமுறைகளை சுமார் மூன்று ஆண்டுகள் விசாரித்த பின்னர், Airbus சுமார் US$4 பில்லியன் தீர்வுத்தொகை செலுத்த ஒப்புக்கொண்டதாக கட்டுரை குறிப்பிடுகிறது.

### 2020 இலங்கை விசாரணை

Gotabaya Rajapaksa ஆட்சிக் காலத்தில் 2020ஆம் ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறிப்பிடத்தக்க முடிவை எட்டவில்லை என்று கட்டுரையாசிரியர் விமர்சிக்கிறார்.

Kapila Chandrasena மற்றும் அவரது மனைவி கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டதாகவும், அதன்பின் Ms. Wijenayake Australia சென்றதாகவும் கட்டுரை கூறுகிறது.

### Airbus ஒப்பந்தத்தை ரத்து செய்ததன் செலவு

2013ஆம் ஆண்டு Rajapaksa நிர்வாகத்தின் கீழ் பேச்சுவார்த்தை செய்யப்பட்ட Airbus ஒப்பந்தம், பின்னர் வந்த Yahapalanaya ஆட்சியின் காலத்தில் 2015இல் ரத்து செய்யப்பட்டதாக கட்டுரை கூறுகிறது.

ஒப்பந்தத்தை முடிக்க Airbus மற்றும் aircraft lessors-க்கு Sri Lanka சுமார் US$115 மில்லியன் cancellation penalty செலுத்தியதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அதே ஒப்பந்தத்தின் கீழ் இரண்டு பழைய A330 விமானங்களை வாங்கியபோது, சந்தை விலையை விட சுமார் US$50 மில்லியன் அதிகமாக செலுத்தியதாகவும் குற்றச்சாட்டு இருந்தது என கட்டுரை கூறுகிறது.

### அரசியல் பாதுகாப்பு பற்றிய ஆசிரியரின் விமர்சனம்

முன்னைய அரசியல் ஆட்சிகளில் அதிகாரத்தில் இருந்தவர்களுக்கும் அவர்களுடன் தொடர்புடைய வணிக நபர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டதாக ஆசிரியர் விமர்சிக்கிறார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)



# திருவிழாக்களும் நீதிக்கான பேரணிகளும்

– யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் –

**யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகே உள்ள ஐநா மாவட்ட அலுவலகத்தில் இருந்து தொடங்கி ஊர்வலத்தில் 2000க்கும் குறையாதவர்கள் கலந்து கொண்டார்கள். பேரணியின் முன்னணியில் எலும்புக் கூடு போல ஆடை அணிந்த நான்கு பேர் காணப்பட்டார்கள். அந்த எலும்புக் கூட்டு ஆடை தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தினால் வெளி நாடு ஒன்றிலிருந்து தருவிக்கப்பட்டது. புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழர் ஒருவர் அதை வாங்கிக் கொடுத்திருக்கிறார். அண்மை மாதங்களாக செம்மணியை முன்னிறுத்தி தமிழ் மக்கள் நீதி கேட்டு முன்னெடுக்கும் போராட்டங்கள் பெரும்பாலானவற்றில் இவ்வாறாக கலையம்சங்கள் இணைக்கப்படுவது நல்ல விடயம்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை, செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணையைக் கேட்டு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான "தமிழ்த் தேசியப் பேரவை" என்று அழைக்கப்படுகின்ற கட்சிகளின் கூட்டு யாழ்ப்பாணத்தில் ஒரு பேரணியை ஒழுங்குபடுத்தியிருந்தது. தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தை நோக்கி சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் நோக்கிலான ஒரு பேரணி அது.

யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகே உள்ள ஐநா மாவட்ட அலுவலகத்தில் இருந்து தொடங்கி கிட்டுப் பூங்காவரையும் அந்தப் பேரணி இடம்பெற்றது. பின்னர் ஒரு பொதுக்கூட்டமும் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பேரவையைச் சேர்ந்த தலைவர்களும். ஒரு மதகுருவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடும் அமைப்பைச் சேர்ந்த ஓர் அம்மாவும் நில மீட்புக்காக போராடும் அமைப்பைச் சேர்ந்த ஒருவரும் பேசினார்கள்.

யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகே உள்ள ஐநா மாவட்ட அலுவலகத்தில் இருந்து தொடங்கி ஊர்வலத்தில் 2000க்கும் குறையாதவர்கள் கலந்து கொண்டார்கள். பேரணியின் முன்னணியில் எலும்புக் கூடு போல ஆடை அணிந்த நான்கு பேர் காணப்பட்டார்கள். அந்த எலும்புக் கூட்டு ஆடை தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தினால் வெளி நாடு ஒன்றிலிருந்து தருவிக்கப்பட்டது. புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழர் ஒருவர் அதை வாங்கிக் கொடுத்திருக்கிறார். அண்மை மாதங்களாக செம்மணியை முன்னிறுத்தி தமிழ் மக்கள் நீதி கேட்டு முன்னெடுக்கும் போராட்டங்கள் பெரும்பாலானவற்றில் இவ்வாறாக கலையம்சங்கள் இணைக்கப்படுவது நல்ல விடயம்.

கடந்த 30ஆம் திகதி தந்தை செல்வா கலையரங்கில் நடந்த அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நினைவு நாள் நிகழ்விலும் சில ஏற்பாடுகள் கலைத்துவமாக இருந்தன. அதுபோலவே லண்டனில் நடந்த ஒரு போராட்டமும் கலைத்துவமாக சிந்திக்கப்பட்டிருந்தது. இது ஒரு நல்ல முன்னேற்றம். தமிழ் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை இயன்ற அளவுக்கு கலைப் பெறுமதி மிக்கவைகளாகத் திட்டமிடுவது.

சிங்கள மக்கள் சில ஆண்டுகளுக்கு முன் நடத்திய தன்னெழுச்சிப் போராட்டங்களில் குறிப்பாக காலிமுகத் திடலில் அமைத்த "கோட்டா கோகம" கிராமத்தில் சிங்கள மக்களுடைய கலையுணர்வு அற்புதமாக வெளிப்பட்டது. ஒரு மக்கள் போராட்டத்தை அரசுக்கு எதிரான போராட்டத்தை எப்படி கலையாக வெளிப்படுத்த முடியும் என்பதற்கு அது இந்த பிராந்தியத்திலேயே ஒரு முக்கிய முன்னுதாரணம்.

தமிழ் மக்களும் சளைத்தவர்கள் அல்ல. ஏற்கனவே சில தசாப்தங்களுக்கு அன்பு தமிழ் மக்களின் எழுச்சியை வெளிப்படுத்திய "பொங்கு தமிழ்" நிகழ்வுகள் கலையாம்சம் பொருந்தியவைதான். அவை "அரங்கச் செயற்பாட்டுக் குழு" என்று அழைக்கப்படுகின்ற ஓர் அமைப்பினால் பெருவெளி நாடகங்களாக திட்டமிடப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் உச்சம் எனலாம். அரங்கச் செயற்பாடாக தொடங்கி பின்னர் பெருந்திரள் வெகுஜன அரசியல் நடவடிக்கையாகப் பரிணமித்த ஒரு முன்னெடுப்பு அது.

எனினும் கடந்த 17 ஆண்டுகளாக கட்சிகள் செயற்பாட்டாளர்கள் மக்கள் அமைப்புகள் போன்றவற்றின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் படைப்புத் திறன் ஒப்பிட்டுளவில் குறைவாக இருந்தது. குறிப்பாக அரசியல் கைதிகளுக்கான போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் போன்றவற்றில் ஒப்பீட்டளவில் கலையம்சங்கள் இருந்தன. கடந்த ஆண்டு செம்மணியில் நடந்த "அணையா விளக்கு" போராட்டத்திலும் கலையுணர்வு வெளிப்பட்டது.

அண்மைக் காலங்களில் போராட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் கலை வெளிப்பாடுகளாகச் சிந்திக்கும் ஒரு போக்கு



அதிகரித்து வருகிறது. அதை வரவேற்க வேண்டும். கவன ஈர்ப்பு என்பது தெருக்களின் ஓரங்களில் நின்று அல்லது மக்கள் கூடும் சந்திகளில் நின்று சுலோக அட்டைகளை ஏந்தியபடி கோஷங்களை எழுப்புவது மட்டும்ல்ல. அதற்குமப்பால் எதிர்ப்பை எந்த அளவுக்கு காலியாக வெளிப்படுத்தலாம் என்பது முக்கியம். ஏனென்றால் கலைப் பெறுமதி மிக்க, படைப்புத்திறன் மிக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் வெகு சனங்களைக் கவர்ந்து இழுக்கின்றன்ஊடகங்களின் கவனத்தையும் வெளிநாடுகளின் கவனத்தையும் கவர்ந்து இழுக்கின்றன. படைப்புத்திறன் மிக்க போராட்டங்களுக்கு வழமையான போராட்டங்களை விடவும் ஈர்ப்பு அதிகம்.

பாடசாலைகளுக்கு இடையிலான, நாடுகளுக்கு இடையிலான, விளையாட்டுப் போட்டிகளில் குறிப்பாக கிரிக்கெட்டில் பிக் மட்ச்களின் போது இரண்டு அணிகளையும் சேர்ந்த ரசிகர்கள் ஆடிப்பாடிக் கூத்தாடுவார்கள். அந்த ஆட்டம் பாட்டங்களில் தாள லயம் இருக்கும். மேளங்கள், இசைக் கருவிகள் இருக்கும். கொந்தளிக்கும் ரசிகர்களை இசை ஒரு மையத்தில் இணைத்து வைத்திருக்கும். அப்படித்தான் அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் கலையம்சம் பொருந்திய நடவடிக்கைகள் போராட்டக்காரர்களை ஒரு மையத்தில் இணைக்கின்றன. வெளியில் இருந்து பார்க்கும் பார்வையாளர்களை தங்களின் நோக்கி ஈர்க்கின்றன.

இந்த அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் கலையம்சங்கள் இணைக்கப்பட்டிருப்பதை வரவேற்க வேண்டும். அந்த பேரணியானது கைலாசப் பிள்ளையார் கோவிலில் இருந்து தொடங்கி நல்லூர் வீதி வழியாக கிட்டுப் பூங்காவை வந்தடைந்தது. அதற்கு முதல் நாள்தான் நல்லூர் திருவிழா முடிவடைந்திருந்தது. நல்லூர் சூழலில் பந்தல்களும் கடைகளும் அகற்றப்பட்டிராத வீதிகளின் வழியே ஊர்வலம் நகர்ந்து வந்தது. இந்த இடத்தில் நல்லூர் தேர் திருவிழாவையொட்டி முகநூலில் பகிரப்பட்ட ஓர் ஒப்பீட்டை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் பிரம்மாண்டமான சனத் தொகையைத் திரட்டக் கூடிய சக்தி இரண்டு பேர்களுக்கு இருந்தது என்றும். "முதலாவதாக வேலை கையில் வைத்திருக்கும் முருகப்பெருமானுக்கும், இரண்டாவதாக வேலுப்பிள்ளையார் பெற்றெடுத்த மகனுக்கும் மட்டும்தான் இருந்தன" என்று அந்தப் பதிவு கூறுகிறது. அந்தப் பதிவின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கோவிலின் ஒரு பகுதியைச் சுற்றிக்கொண்டு போன அந்த ஊர்வலமானது பிரம்மாண்டமானது இல்லைத்தான். அதில் இரண்டாயிரத்துக்கும் குறையாதவர்கள் பங்குபற்றினார்கள்.

கடந்த 17 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய சில நடவடிக்கைகளில் மட்டும்தான் மக்கள் அதிகமாகத் திரண்டிருக்கிறார்கள். குறிப்பாக பொத்துவில் தொடக்கம் பொலிவண்டி வரையிலுமான பேரணியைச் சுட்டிக்காட்டலாம். அடுத்ததாக, இரண்டு "எழுக தமிழ்களைச்" சுட்டிக் காட்டலாம். இவைதவிர, தேர்தல் திருவிழாக்களின் போது கட்சிகள் காசைக் கொட்டி, வாகனங்களை விட்டு, ஜனங்களை அள்ளிக்கொண்டு வருகின்றன. அங்கேயும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவதுண்டு.

இவைதவிர வழமையான கவன ஈர்ப்பு நடவடிக்கைகளின் போது அல்லது அரசுக்கு எதிரான பேரணிகளின் போது பெருந்திரள் மக்களைக் காண முடிவதில்லை, பெருந்திரள் மக்களை ஒரு மையத்துக்குக் கொண்டு வருவது என்று சொன்னால் முதலாவதாக மக்களோடு நேரடியாகத் தொடர்புடைய கட்டமைப்புகள் இருக்கவேண்டும். இரண்டாவதாக, அதற்கு ஒரு "பட்ஜெட்" உண்டு.காசு இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் காசு வேண்டும்.

ஒரு காலம் இருந்தது, தொழிற்சங்க உறுப்பினர்கள் சந்தாப் பணம் செலுத்தி தொழிற்சங்கத்தின் பொது நிதியை பலப்படுத்துவது என்ற ஒரு போக்கு. அல்லது தொண்டர்கள் தாமாக முன்வந்து தங்களுடைய உழைப்பைத் தியாகம் செய்து அர்ப்பணிப்போடு வேலை நேரத்தில் போராட்டங்களில் ஈடுபடுவார்கள். போராட்டங்களில் ஈடுபட்டதாலேயே வேலைகளை இழப்பார்கள். அது ஒரு காலம். இப்பொழுது "வொலன்டியர்ஸ்". தன்னார்வலர்கள் என்று வருபவர்களுக்குக் காசு கொடுக்க வேண்டும். தேர்தல் நடவடிக்கைகளின் போதும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும் காசு கொடுக்க வேண்டும் சுவரொட்டிகளைக் கிழிப்பதற்கும் காசு கொடுக்க வேண்டும். இது உலகப் பொதுவான ஒரு போக்கு. அரச சார்பற்ற நிறுவனங்களின் எழுச்சிகளின் பின்னணியில் "வொலன்டியரிசம்" எனப்படுவது காசு கொடுத்துச் செய்வதாக மாறிவிட்டது.

இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள், ஊர்வலங்களுக்கு ஆட்களை அழைத்துக் கொண்டு வரும்போது முதலாவதாக பயண ஏற்பாடு செய்ய வேண்டும். அதன்பின் அவர்களுக்குச் சிற்றுண்டிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீருக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்குச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சிலசமயம் தங்குமிடத்துக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாமே செலவுதான். எல்லாமே காசுதான். காசு இல்லை என்றால் போராட்டம் இல்லை என்ற ஒரு நிலை. இதை மறுவளமாகத் திருப்பிக் கேட்டால், காசை அள்ளிவீசத் தயாராக இருப்பவர்கள் துணிந்து அரசியலில் இறங்கலாமா?

இப்படிப்பட்டதோர் சமூகப் பொருளாதார அரசியல் பின்னணிக்குள், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியானது, பிரம்மாண்டமானது இல்லையென்றாலும் பொருத்தமான நேரத்தில், பொருத்தமான எதிர்ப்பை அது வெளிப்படுத்தியது என்பது உண்மை.இது ஜெனிவா கூட்டத் தொடரின் காலம். 63ஆவது ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னணிகள் கடந்த சனிக்கிழமை ஜனநாயகத் தமிழ்க் தேசிய கூட்டமைப்பு சாவகச்சேரியில் ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியது. இரண்டு ஆண்டு கால அனுர ஆட்சிக்கு எதிராக அந்த உண்ணாவிரதப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதுவும் சிறிய அளவிலான ஒரு கவன ஈர்ப்புப் போராட்டம்தான். அங்கேயும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரளவில்லை.

அதுபோலவே அதே நாளில், வெடுக்கு நாறி மலையயில், பிக்குகள் தலைமையில் ஒரு வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் தமிழ் மக்கள் எதிர்ப்புக் காட்டக் கூடும் என்று எதிர்பார்ப்போடு போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் அங்கே காணப்பட்டார்கள்.

தமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தமது தலைமுறைகளின் எதிர்கால வாழ்வையும் தீர்மானிக்கக்கூடிய தமது அரசியலைக் குறித்து தமிழ் மக்கள் உணர்திறன் குறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதனை இவை காட்டுகின்றன. பொழுதுபோக்கு நடவடிக்கைகளிலும் கழிப்பூட்டும் நிகழ்வுகளிலும் ஆயிரக்கணக்கில் திரளும் தமிழ் மக்கள், பெருந் திருவிழாக்களில் லட்சக்கணக்கில் திரழும் தமிழ்மக்கள், ஏன் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அரசியல் நடவடிக்கைகளில் சிலசமயம் நூற்றுக்கணத்தில் கூடத் திரள்வதில்லை? முருகனும் வேலு பிள்ளையாரின் மகனும்தான் இந்த மக்களை திரட்டலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? இந்த மக்களை ஏன் கடந்த 17 ஆண்டுகளாக அப்படி திரட்ட முடியவில்லை? இனி யார் அப்படித் திரட்டுவது? எப்பொழுது திரட்டுவது?




# ஈழத் தமிழினத்தின் அணையாத ''விடுதலைத் தீ''' திலீபன் என்னும் 'பெருமகன்''

*'திலீபனின் உண்ணாவிரத நாட்கள் கடந்தோடிய போதும் அந்தக் கோரிக்கைகள் எதுவும் காந்தி தேசத்தினால் நிறைவேற்றப்படவில்லை. உடல் வலிமை குன்றிய போதிலும் திலீபனின் மனவலிமை வானளவு உயர்ந்து நின்றது. ஆனால் காந்தி தேசம் தமிழருக்கு பெரும் துரோகம் இழைத்தது. 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை அன்று, தியாகப்பயணத்தின் பன்னிரெண்டாவது நாள், சரியாகக் காலை 10.48 மணிக்கு திலீபன் உயிர் பிரிந்தது. அமைதிப் படை என்ற போர்வையில் எமது இனத்தை அழிக்க வந்த இந்திய வல்லாதிக்க அரசின் முகத்திரையைக் கிழித்தெறிந்து அறவழிப் போரிற்கு புது இலக்கணம் வகுத்தான் திலீபன். பாரத தேசம் தன் வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்கவிட்டபோது, தன் உயிரையே சாட்சியமாக்கி நீதி கேட்ட அந்த மாவீரனின் தியாகம், ஒவ்வொரு தமிழனின் மூச்சுக் காற்றிலும் இன்னமும் கலந்திருக்கிறது. 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழ் ஈழம் மலரட்டும்'' என்ற அவனின் இறுதி வரிகள், வெறும் வார்த்தைகள் அல்ல. தலைமுறைகள் தாண்டி ஒலிக்கும் தமிழின விடுதலைக்கான அழைப்பு.''*

– கே.பாலா –

ஈழப் பெருநிலத்தின் விடுதலைப் பாதையில் குருதியைச் சிந்தி உயிர்நீத்த ஆயிரக்கணக்கான மாவீரர்களின் வரிசையில், தன் உயிரையே தியாகத் தீயில் ஆகுதியாக்கியவன் தியாக தீபம் திலீபன். ஆயுதங்களின் சத்தம் ஓயாத ஒரு போர்க்களத்தில், அகிம்சை என்ற சாத்வீக ஆயுதத்தை உயர்த்திப் பிடித்து, காந்திய தேசத்தின் கதவுகளைத் தன் பட்டினிப் போரினால் தட்டிய அந்தத் தியாகியின் அர்ப்பணிப்பு உலக வரலாற்றையே உலுக்கியது. அதனால்தான் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 15ஆம் திகதி முதல் செப்டம்பர்26 ஆம் திகதி வரையிலான 12 நாட்கள் தமிழர் தேசம் மற்றும் தமிழர் வாழும் புலம் பெயர்தேசமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது.

1987 ஆம் ஆண்டு, தாய்மண்ணின் 5 அம்சக் கோரிக்கைகளுக்காகத் தன் நாக்கில் ஒரு சொட்டு நீரும் படாமல், 12 நாட்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் உடலை உருக்கி, உயிர் பிரியும்போது கூட புன்னகையோடு விடைபெற்ற திலீபன், தமிழினத்தின் விடுதலைத் தாகத்தின் அடையாளமானான். சொட்டுச் சொட்டாய் உயிர் கரைந்து, மூச்சுக்காற்று ஒடுங்கியபோதும், தமிழ் மக்களின் விடிவொன்றையே தன் இறுதித் துடிப்பாகக் கொண்டு மடிந்த அந்தப் புனிதமான தியாகத்தின் 39ஆவது நினைவு நாளில், நம் கண்களில் கண்ணீரும் நெஞ்சில் சுதந்திரத் தாகமும் கொப்பளிக்க, தியாக தீபம் திலீபனின் நினைவுகளை ஒவ்வொருவரும் சுமந்து கொண்டிருக்கின்றோம்.

1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி ஊரெழு மண்ணில் பிறந்த திலீபனின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன். மருத்துவபீட மாணவனாக இருந்த 1983 காலப்பகுதியில் தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்துக்கொண்டு "திலீபன்" என்னும் பெயரை தனதாக்கிக்கொண்டவன். போர்ப்பயிற்சிகளை நிறைவு செய்து வெளிவந்து வலிகாமத்தின் ஒரு பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டு வந்தநிலையில் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் அவனை யாழ் அரசியல் துறைப் பொறுப்பாளராக 1985ஆம் ஆண்டில் நியமித்தது.

இவ்வாறான நிலையில்தான் 1987 இல் இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் தமிழீழ மண்ணில் கால்பதித்தது. தன்னினம் பகைவனால் அழிக்கப்பட்டு, இந்திய வல்லாதிக்க அரசின் கூட்டுச்சதிக்கு இலக்காகி சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதைக் கண்ட திலீபன் தான் உயிரிலும் மேலாக நேசித்த மக்களின் விடியலுக்காக மகாத்மா காந்தி இவ்வுலகிற்கு விட்டுச் சென்ற போராட்ட வழிமுறையான சாகும்வரையில் உண்ணா விரதம் என்ற அகிம்சை வழி ஆயுதத்தை கையில் எடுத்தான்.

இந்த முக்கியமான முடிவு திலீபன், அவனது அரசியல் துணைப் பொறுப்பாளர் ராஜன் மற்றும் "திரு" என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திருநாவுக்கரசு ஆகிய மூவருக்கும் இடையே நடந்த முத்தரப்பு உரையாடலுக்குப் பிறகே எடுக்கப்பட்டது. இந்த உரையாடலில் இரு சாத்தியமான தடைகள் அடையாளம் காணப்பட்டன. ஒன்று, தலைவர் பிரபாகரன் இதற்கு ஒப்புதல் அளிப்பாரா என்பது. மற்றொன்று, இந்தியாவின் எதிர்வினை எவ்வாறு இருக்கும் என்பது. விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திய போராட்டத்தைக் கொள்கையாகக் கொண்டவர்கள். ஆனால் திலீபனோ, காந்தியின் அகிம்சையின் தொட்டிலான இந்தியாவிற்கு எதிராக அகிம்சைப் போராட்டத்தைக் கையிலெடுக்கத் திட்டமிட்டான்.

திலீபன் தனது எண்ணத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கூறியபோது, பிரபாகரனால் இந்த முடிவை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்திய-இலங்கை அரசாங்கங்களுக்கு எதிராக அகிம்சைப் போராட்டங்கள் பயனற்றவை என்பதே அவரின் நிலைப்பாடாக இருந்தது. கடந்த காலத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் நடத்திய சத்தியாக்கிரகங்களும், அவை கொடூரமாக அடக்கப்பட்ட விதமுமே இதற்குச் சான்றாக இருந்தன. அகிம்சைப் போராட்டம் என்பது புலிகளின் கொள்கைக்கே எதிரானதாக இருந்தது. ஆனால், திலீபன் ஒரு குறிப்பிட்ட லட்சிய உறுதி பூண்டவனாக இருந்தான். அவன் பிரபாகரனிடம் தனது முன்மொழிவை ஏற்கும்படி தொடர்ந்து வலியுறுத்தினான். சாகும்வரை உண்ணாவிரதமிருக்க தனக்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டான். இந்தியாவில் தங்கியிருந்தபோது பிரபாகரனே நீர் அருந்தாமல் சாகும்வரை உண்ணாநோன்பு இருந்த நிகழ்வை திலீபன் நினைவூட்டினான். இறுதியில் பிரபாகரனும் சம்மதித்தார்.

1987 செப்டம்பர் 15ஆம் திகதி நல்லைக் கந்தனின் முன்றிலிலே, மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும், சிறைச் சாலையிலும் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் மீளப்பெறப்பட வேண்டும், தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படும் முயற்சிகள் முற்றாகக் கைவிடப்பட வேண்டும் என அகிம்சையின் தாய் வீடான இந்திய தேசத்திடமே 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உண்ணாவிரத அறப்போரைத் தொடுத்தான்.

தனது உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்குவதற்கு முன், எந்தச் சூழ்நிலையிலும் தனது போராட்டத்தைக் கலைக்கக் கூடாது என்று திலீபன் தெளிவான கட்டளைகளைப் பிறப்பித்திருந்தான். நீர் அருந்துவதில்லை என்றும் அவன் முடிவெடுத்தான். அயர்லாந்தின் பாபி சேண்ட்ஸ், இந்தியாவின் பொட்டி ஸ்ரீராமுலு மற்றும் சங்கரலிங்க நாடார் ஆகியோர் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தவர்கள் என்றாலும், அவர்கள் நீர் அருந்தினார்கள். தனது உடல்நிலை மோசமடைம்போது, வலியினால் தண்ணீருக்காகக் கதறும் சூழல் வரலாம் என்பதை திலீபன் அறிந்திருந்தான். எனவே, தான் மயக்க நிலையில் அழுது புலம்பினாலும் கூட, எவரும் தனக்குத் தண்ணீர் தரக் கூடாது என்று கடுமையான கட்டளையிட்டிருந்தான்.

திலீபனின் உண்ணாவிரத நாட்கள் கடந்தோடிய போதும் அந்தக் கோரிக்கைகள் எதுவும் காந்தி தேசத்தினால் நிறைவேற்றப்படவில்லை. உடல் வலிமை குன்றிய போதிலும் திலீபனின் மனவலிமை வானளவு உயர்ந்து நின்றது. ஆனால் காந்தி தேசம் தமிழருக்கு பெரும் துரோகம் இழைத்தது. 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை அன்று, தியாகப்பயணத்தின் பன்னிரெண்டாவது நாள், சரியாகக் காலை 10.48 மணிக்கு திலீபன் உயிர் பிரிந்தது. அமைதிப் படை என்ற போர்வையில் எமது இனத்தை அழிக்க வந்த இந்திய வல்லாதிக்க அரசின் முகத்திரையைக் கிழித்தெறிந்து அறவழிப் போரிற்கு புது இலக்கணம் வகுத்தான் திலீபன்.



சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கிய திலீபன் இறுதியாக பேசிய வார்த்தைகள் இவைதான்,

"என்னால் பேச முடியவில்லை, ஆயினும் என் மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது. நீங்கள் பல்லாயிரக்கணக்கில் இந்தப் புரட்சிக்குத் தயாராகிவிட்டதை என் கண்கள் பார்க்கின்றன. நான் திருப்தி அடைகிறேன். இன்று பேச முடியாத நிலை இருக்குமென நினைத்தேன். ஆனால் நீங்கள் தந்த உற்சாகம்தான் என்னை இப்போதும் வாழவைத்துக் கொண்டுள்ளது. நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் இந்தப் பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும். நான் நேற்றும் கூறிவிட்டேன் எனது இறுதி ஆசை இதுதான். நான் மீட்கப்பட முடியாத நிலைக்குச் சென்றுவிட்டதை உணர்கிறேன். ஆனால் பெரும்பணியை உங்களிடம் விட்டுச் செல்கிறேன்.

நான் மிகவும் நேசித்த என் தோழர்கள், என் சகோதரிகள் எல்லாவற்றிலும் மேலாக என் தலைவன் பிரபாகரன் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! இப் புரட்சி நாள் என்னுயிருக்கு மேலாக நேசிக்கும் என் மக்களுக்குக் கிடைக்கட்டும். எமது எதிர்கால சந்ததி வாழ ஒரு நாடு தேவை. அல்லாவிட்டால் நாளை எங்களைப் போல்தான் எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும், வருத்தப்படும். எனது மூளை இப்போது எதனையும் நன்றாக கிரகிக்கவில்லை என்பது எனக்கு விளங்குகிறது. இதில் பிழைகள் இருக்கலாம். இதை நீங்கள் பொறுத்துக்கொள்ளுங்கள். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்".

ஈழத் தமிழினத்தின் விடுதலை வரலாற்றில், தன் மூச்சையும் உயிரையும் தாய்நிலத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்த ஆயிரமாயிரம் மாவீரர்களின் தியாகங்கள் என்றும் அழியாதவை. ஆயுதப் போராட்டங்கள் வெடித்துக்கிளம்பிய நிலத்தில், அகிம்சை என்னும் உன்னத ஆயுதத்தைக் கையில் ஏந்தி, தன் உடலையே உருக்கி காந்திய தேசமான பாரதநாட்டுக்கே பாடம் எடுத்தவன்தான் தியாக தீபம் திலீபன்.

தியாகி தீலீபனின் தியாக வரலாறு, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒரு குறியீடாக விளங்குவதோடு மட்டுமல்லாது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இயல்பிற்கும் ஒரு குறியீடாக விளங்கி வருகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகப் பெரிய எழுச்சி கொண்டதும், வளர்ச்சி கண்டதும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினால்தான். அடக்குமுறைகளுக்கு - அவை எவ்வளவுதான் பெரிதாக, பிரமாண்டமாக இருந்தாலும் விட்டுக் கொடுப்பதில்லை. எவ்வளவுதான் பாரிய இழப்புக்களைச் சந்தித்தாலும், தன்னுடைய உயிரே போனாலும் அடக்குமுறைகளுக்கு அடிபணிவதில்லை என்பது பிரபாகரனின் அடிப்படை இயல்பு.

இந்த உறுதிகுலையாத உரம்தான் பிரபாகரனையும் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க, முன்னர் தூண்டியது. 1986 ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தின் போது, இந்தியாவில் தமிழ்நாட்டிலிருந்த பிரபாகரனின் தொலைத் தொடர்பு சாதனங்கள் முதலானவற்றை இந்திய அரசு பறிமுதல் செய்தது. இந்த அடக்குமுறைக்கு எதிராக பிரபாகரன் கடும் சினம் கொண்டார். இந்தியாவில் இருக்கக்கூடிய ஒரு போராட்ட வடிவமான, சாகும் வரையிலான உண்ணா விரதப்போராட்டத்தை பிரபாகரன் உடனடியாகவே ஆரம்பித்தார்.

தண்ணீர்கூட அருந்தாத, சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் பிரபாகரன், எந்தவிதமான முன்னறிவித்தலும் இல்லாமல், உடனேயே ஆரம்பித்து விட்டார். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஒருநாள் கழித்த பின்னர் ஆரம்பிக்கும்படி இயக்கப் போராளிகளும், பிரமுகர்களும் பிரபாகரனை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். "அந்த ஒருநாள் அவகாசத்தில் தமிழக அரசிற்கும், தமிழக அரசியல்வாதிகளுக்கும், வெகுசன ஊடகங்களுக்கும், தமிழக மக்களுக்கும் உங்களது சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை அறிவித்து விடலாம். அதன் பின்னர் நீங்கள் உங்களுடைய உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கலாமே" என்றுகூட அவர்கள் பிரபாகரனிடம் வாதிட்டார்கள்.

ஆனால் அந்த ஆலோசனையைத் திட்டவட்டமாக மறுத்துவிட்ட பிரபாகரன் "இல்லை! நீங்கள் சொல்வது ஓர் அரசியல் நாடகம். எனக்கு அது தேவையில்லை. அதில் உடன்பாடும் இல்லை. நான் இந்த நிமிடம், இந்த விநாடியிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல், சாகும் வரையிலான என்னுடைய உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துவிட்டேன். இந்திய அரசு தான் பறித்தெடுத்த தொலைத்தொடர்பு சாதனங்கள் முதலானவற்றை மீண்டும் திருப்பித் தரும் வரைக்கும் அல்லது என்னுடைய உயிர் போகும் வரைக்கும் எனது போராட்டம் தொடர்ந்து நடைபெறும்" என்றார்.

பிரபாகரனின் உறுதியால் 48 மணித்தியாலங்களுக்குள் இந்திய அரசு பணிந்தது. தான் பறித்தெடுத்த தொலைத் தொடர்பு சாதனங்கள் முதலானவற்றை பிரபாகரன் தங்கியிருந்த வீட்டிலேயே அரசு கொண்டு வந்து தந்தது. பிரபாகரன் தன்னுடைய உண்ணா விரதப்போராட்டத்தை முடித்தார். தன்னுடைய உயிரே போனாலும் அடக்குமுறைக்குப் பணிவதில்லை என்ற பிரபாகரனின் இயல்பின் வெளிப்பாடுதான் திலீபனிடமும் இருந்தது. பிரபாகரன் தானே முன்னின்று வழிகாட்டிய பாதையில், திலீபன் பின் தொடர்ந்து போராடினான். ஆனால் காந்தி தேசம் தமிழருக்கு பெரும் துரோகம் இழைத்தது. திலீபன் தியாகியானான்.

காந்திய தேசத்தின் கதவுகளை அகிம்சையின் பெயராலேயே தட்டி, உலக அரசியல் வரலாற்றில் ஒரு ஒப்பற்ற

# கனடாவில் 25ம் திகதி தொடக்கம் நடைபெறும் 'ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா-2026 ஐ சிறப்பிக்கும் வகையில் ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட 'டோரதி' திரைப் படக்குழுவினர்











கனடா வாழ் செந்தூரன் நடராஜா அவர்களை நிறுவனராகக் கொண்டு ஆரம்பிக்கப்பெற்று அதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 25ம் திகதி தொடக்கம் மார்க்கம் நகரில் யோர்க் சினிமாவில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ள “ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா-2026 ஐ சிறப்பிக்கும் வகையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட “டோரதி“ திரைப் படக்குழுவினர் அனைவரையும் உற்சாகப்படுத்தியும் மகிழ்வித்து அங்கு சில மணிநேரங்கள் தமிழ்க் கனடியர்களோடு ஊடக நண்பர்களோடும் உரையாடி மகிழ்ந்தனர்.

கனடாவில் இம்மாதம் 25ம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ள “ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா-2026 ஐ சிற்ப்பிக்கும் வகையில் ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட “டோரதி“ திரைப் படக்குழுவினர் அதன் இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் தலைமையில் கலந்து கொண்டனர். குறிப்பாக திரைப்படத்தின் தயாரிப்பாளர் அவர்களும் அங்கு கலந்து சிறப்பித்து. இங்குள்ள தமிழ் மக்களின் கலை மீதான ஆர்வத்தைப் பாராட்டினார்.

டுறம் கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி ஊடகச் சந் திப்பிற்கு வருகை தந்த “டோரதி“ திரைப் படக்குழுவினர் அதன் இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் உட்பட அனைவரையும் “ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழாவின் நிறுவனர் செந்தூரன் நடராஜா மகிழ்ச்சியுடன் வரவேற்றார். தொடர்ந்து அங்கு விசேட விருந்தினராகக் கலந்து கொண்ட ஒன்றாரியோ மாகாண அரசின் செயற்கை நுண்ணறிவு அமைச்சின் இணையமைச்சர் விஜேய் தணிகாசலம் அரசின் பாராட்டுச் சான்றிதழை அனைவருக்கும் வழங்கினார்.



அன்றைய தினம் அங்கு கூடியிருந்த அனைத்து திரைத்துறை ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரின் கேள்விகளுக்கும் இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் சிறப்பானதும் விளக்கமானதுமான பதிலை அளித்தார். மேற்படி “டோரதி“ திரைப்படத்திற்கு “இசைஞானி“ இளையராஜா இசையமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கே காணப்படும் படங்கள் ஊடகச் சந்திப்பில் எடுக்கப்பட்டவையாகும்.








# ஊழலற்ற தூய்மையான ஆட்சியை நிலைநிறுத்தியுள்ளோம் என்கின்றார்

## அநுர அரசின் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல



”தேசிய மக்கள் அரசு அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் அளித்த வாக்குறுதிகளுக்கு அமைவாகஇ ஆட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்பை உறுதிசெய்து ஊழலற்ற ஆட்சியை கடந்த 2 வருட காலத்தில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியுள்ளது. அத்துடன் அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மீது எவரும் விரல் சுட்டிக் குற்றம் சுமத்த முடியாத அளவுக்கு முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் கூடிய புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- ”தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளுக்கு அமைவாகஇ ஆட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்பை முழுமையாக உறுதிசெய்து ஊழலற்ற தூய்மையான ஆட்சியை கடந்த 2 வருட காலத்தில் நிலைநிறுத்தியுள்ளது.

கடந்த கால ஆட்சி முறைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு, நாட்டின் சாதாரண மக்களையும் நிர்வாகக் கட்டமைப்போடு நேரடியாக இணைக்கும் வகையில் மக்கள் பங்கேற்புடனான ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வுகளை வழங்குவதற்காக அரசியல் தலைமைத்துவம் நேரடியாகவே மக்களிடம் செல்லும் புதிய நடைமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, ஜனாதிபதி நேரடியாகப் புலத்சிங்களஇ பேருவளை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து மக்களின் நிலைமைகளைக் கேட்டறிந்துள்ளார்.

இதேபோன்றுஇ ஜனாதிபதி மாவட்ட மட்டத்திலும், அமைச்சர்கள் தொகுதி மட்டத்திலும், நகர சபைத் தலைவர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வரையிலும் நேரடியாகச் சென்று மக்களையும் அரச அதிகாரிகளையும் சந்தித்துப் பணியாற்றி வருகின்றனர். இது ஒரு சங்கிலித் தொடர் போன்ற கட்டமைக்கப்பட்ட அமைப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

கடந்த ஆட்சிக் காலங்களில் கொடிகட்டிப் பறந்த ஊழல், இலஞ்சம் மற்றும் நிர்வாக முறைகேடுகளை முழுமையாக ஒழிக்கவே இந்த அரசை மக்கள் தோற்றுவித்ததன் முதன்மை நோக்கமாகும்.

அந்த மக்கள் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில், தற்போதுள்ள 159 நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது நாடு முழுவதும் உள்ள 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளோ எவ்வித ஊழல் நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. மக்கள் பிரதிநிதிகள் மீது எவரும் விரல் சுட்டிக் குற்றம் சுமத்த முடியாத அளவுக்கு வெளிப்படைத்தன்மையுடன் கூடிய புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன்இ அரசியல்வாதிகள் எவரும் இனி ஊழல் சார்ந்த செயல்களுக்கு அரச அதிகாரிகளையோ அல்லது பொதுமக்களையோ தூண்டப்போவதில்லை. இதனால் அரச அதிகாரிகள் எவ்வித அரசியல் அழுத்தங்களுக்கும் அஞ்சாமல்இ சுதந்திரமாகவும் தைரியமாகவும் நாட்டின் வளர்ச்சிக்காகப் பணியாற்ற முடியும். மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் கைகோர்த்து நாட்டுக்காகப் பணியாற்றுவதற்கு இதுவொரு பொன்னான வாய்ப்பாக அமைந்துள்ளது.” - என்றார்.



# "கனடாவில் நாம் இம்முறை இளைய தலைமுறை மாணவர்களையும் இணைத்துக் கொண்டு ' உலக தொல்காப்பிய மாநாடு-2026' ஐ நடத்துகின்றோம்"

## பத்திரிகையாளர்கள் சந்திப்பில் மாநாட்டின் இணைப்பாளர் பேராசிரியர் இல.சுந்தரம் உவகையுடன் தெரிவிப்பு!









”கனடாவில் எதிர்வரும் 19ம் மற்றும் 20 திகதிகளில் வார இறுதி விடுதலைதினங்களில் நடைபெறவுள்ள மாநாட்டிற்கான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பெற்றுள்ளன. மாநாட்டில் பங்குபற்றும் வகையில் இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா போன்ற நாடுகளிலிலுருந்து பங்குபற்றும் பேச்சாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் கனடா வந்து சேர்ந்துள்ளனர். இவ்வாறான நிலையில் எமது மாநாட்டுக் குழுவிற்கு இந்த ஆண்டு பொதுமக்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து நிதி அன்பளிப்புக்கள் கிடைத்துள்ளன. எனினும், நாம் மாநாட்டுக்கு பார்வையாளர்களாக வந்து கலந்த கொள்ளவுள்ள அனைவருக்கும் உணவு மற்றும் சிற்றூண்டிகள் என அனைத்து வசதிகளை செய்துள்ளோம்.

மறுபக்கத்தில் அறிவு சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் எமது மொழியின் பெருமையையும் தொன்மையையும் பறை சாற்றும் பல நிகழ்ச்சிகள் மாநாட்டில் இணைக்கப்பட்டுள்ளன. நாம் இம்முறை இளைய தலைமுறை மாணவர்களையும் இணைத்துக் கொண்டு “உலக தொல்காப்பிய மாநாடு-2026“ ஐ நடத்துகின்றோம். அவர்களின் தேடல், மற்றும் ஆற்றல் அறிவு போன்றவற்றை நேரில் காண கனடா வாழ் தமிழ் மக்கள் அனைவரும் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும்” இவ்வாறு சில மணி நேரத்திற்கு முன்பாக கனடா ஸ்காபுறோ நகரில் குயின் பிளேஸ் மண்டபத்தில் நடைபெற்ற உலக தொல்காப்பிய மாநாடு - 2026 தொடர்டபான பத்திரிகையாளர்கள் சந்திப்பில் மாநாட்டின் இணைப்பாளர் பேராசிரியர் இல.சுந்தரம் உவகையுடன் தெரிவித்தார்.

கனடா - தொல்காப்பிய மன்றத்தின் தலைவி திருமதி செல்வநாயகி ஸ்ரீதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் மன்றத்தின் முக்கிய உ றுப்பினர்கள் அனைவரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்தோடும் நம்பிக்கையோடும் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பங்குகொண்டனர். மன்றத்தின் செயலாளர் சுகந்தன் வல்லிபுரம் மற்றும் அனைவரும் மாநாட்டின் வெற்றிக்காக தீவிரமான கடந்த சில மாதங்களாக உழைத்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
416.893.3216


Generously Sponsored by
alectra
Discover the possibilities
CN
Loblaw Companies Limited
September is
Brampton Tree Month!
brampton.ca/trees
@BramptonParksRec
BRAMPTON


Carefirst Family Health Team
Carefirst
Family Health Team
Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்
• அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
• உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
• நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
• நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.
அவர் விபரம்:
டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)
டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.
உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.
Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam
Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca
11/24
Steeles Ave.
Kennedy Road
Midland Ave
McNicoll Ave.
Silver Star Blvd.
Finch Ave.
N


Queen's UNIVERSITY
Graduate Diploma in Immigration and Citizenship Law
immigrationdiploma.ca
இணையவழி மூலம் கற்றும்
உலகளாவிய வாடிக்கையாளர்
தளத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்!


புரட்டாசி
சனி
19 செப்டம்பர், 2026
பக்தியோடு பாரம்பரிய சைவ சுவையையும்
கொண்டாடுவோம்.
HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
SCARBOROUGH
416 293 7755
MISSISSAUGA
905 290 0769
BRAMPTON
905 457 7575
DELTA B.C
778 578 7575


METROPOLITAN CENTRE
KENNEDY & FINCH
3840 FINCH AVE E, SCARBOROUGH, ON M1T 3T4
OCT 3, 2026 | SATURDAY @ 6 PM
Title Sponsor
Vijaya Jewellery
TICKET AVAILABLE HERE
Scarborough
Cell Tell Mobility
2611 Eglinton Ave East
416-266-6818
Sun City Supermarket
2761 Markham Rd
(416) 724-6666
Gunaams Supermarket
145 Morningside Ave Unit 33
(416) 283-9998
Cell Tell Mobility
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776
Kennedy & Ellesmere
Samy & Sons
416-298-1598
Ruby & Ruby Saree Palace Inc.
2843 Lawrence Ave Est
416-264-7833
Markham & Steeles
New Ranganas Jewellery
6055 Steeles Ave E Unit C102
(647) 947-2864
Vijaya Jewellery
3341 Markham Rd #127,
(437) 833-3197
NEW ROYAL FASHIONS
6055 Steeles Ave E
(416) 519-1119
Sprin Florist Canada
3011 Markham Rd
416-893-2624
Majestic City
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290
GTA Square Mall
Winners Lotto Centre
Tel: 416-291-9990
Eraa plaza (Neilson / Finch)
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002
Tapscott Rd / Finch ave
MS Convenience
416-332-0961
5633 Finch Ave E units 5
Middlefield Rd & Steeles Ave
Pasumai Market
2-2002 Middlefield Rd, Markham,
(905) 472-5525
Etobicoke (Kipling & Steeles)
A S A Financial Service
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425
AJAX (Harwood & Taunton Rd)
New Spiceland Restaurant
905-426-4445
Mukesh
Playback Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
Santhosh Subramanian
Playback Singer
Magisha
Super Singer
Venkat
Tabla
Manikandan
Keybordist
Old is gold
நெஞ்சம் மறப்பதில்லை
Thalalaya Live Band
SCAN NOW
GET 20% OFF YOUR TICKET!
Amazing Electric Motors Ltd.
Kenney Nithy
Service Center Manager
VIBRANT HOSPITALITY GROUP
STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM
CEO
416-993-2638
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
TICKETS $30 | $50 AND VIP
More Info 416-564-9642 | 416-566-0790
H & ME
YOUR NEXT MOVE STARTS HERE
SIVA NAGAMANY 647-289-0091
KT GROUP
BEHIND ME MEDIA
Guna Selliah
Insurance Broker
416.317.6500
நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
North Toronto CREMATORIUM
Royal Fashions
BRIDAL JEWELLERY RENTAL
Ocean Accounting Tax Consultants
Accounting Services for Personal and Small Business
416-285-6900
Spring Florist
For All Moments of Life
416-893-2624 647 218 6222
TSA MEAT STORE
437-886-2597
647-328-8880
Canadian Tamils' Business Directory
TAMILS' GUIDE
Athavan Publications Inc.
Tel: 416.615.4846
info@tamilsguide.com
771 Brimley Road,
Scarborough, ON, Canada, M1J 1C7
Senthi Chelliah
President & CEO
www.tamilsguide.com
Our Services
Oasis
EVENTS AND DECOR
ONLINE: 416-623-8110
YUGAM RADIO
Ravi: 416- 898-7284
Ruby: 416-670-6522
JRB
R.R.Rajkumar
647-289-6164
GTA

இலங்கை செய்திகள்
Sri Lanka News
kd;dhu; epUgu;

# வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 4 மாடி தாதியர் வதிவிடத்திற்கு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அடிக்கல் நாட்டினார்



(17-09-2026)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் தாதியர்களின் நீண்டகால இருப்பிடப் பிரச்சினைக்குத் தீர்வாக 48 தாதிய உத்தியோகத்தர்கள் தங்கக்கூடிய 4 மாடிகளைக் கொண்ட புதிய குடியிருப்பு வளாகம் அமைப்பதற்கு 17ம் திகதி வியாழக்கிழமை அன்று காலை அடிக்கல் நாட்டப்பட்டது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

மாகாண சபை நிதியிலிருந்து ரூ. 170.04 மில்லியன் செலவில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்படுகிறது. இப்புதிய விடுதி வளாகத்தின் கட்டுமானப் பணிகளை 2027 ஜூன் மாதத்திற்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேலதிக அபிவிருத்திகள்: மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் பணிகளுக்காக ரூ. 235 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்திற்கு 300 சுகாதார உதவியாளர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன், மருத்துவமனைகளுக்கான புதிய உபகரணங்களைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய நிதியுதவி மற்றும் மாகாண சபை நிதியின் கீழ் மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் சுமார் ரூ. 1500 மில்லியன் பெறுமதியான சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிகழ்வில் மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணப் முதன்மைச் செயலாளர் தனுஜா முருகேசன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வி.பி.எஸ்.டி. பத்திரன மற்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர் கள், மருத்துவர்கள், தாதியர்கள் கலந்து கொண்டனர்.



# மன்னார் — முல்லைத்தீவு தனியார் பேருந்தில் தவறவிட்ட நகை மற்றும் பணப்பை ஆகியவற்றை மீட்டு ஒப்படைத்த சாரதி, மற்றும் நடத்துனர் கௌரவிக்கப்பெற்றனர்



(17-09-2026)

மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்தில் இருந்து 16ம் திகதி அன்று புதன்கிழமை முல்லைத்தீவிற்கு பயணிகளுடன் சென்ற தனியார் பேருந்து ஒன்றில் பெண் ஒருவர் பெறுமதியான நகை மற்றும் பணத்துடன் தவறவிட்ட பணப்பையை கண்டெடுத்தது ஒப்படைத்த குறித்த தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகிய இருவரும் 17ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து கௌரவிக்கப்பெற்றுள்ளனர்.

மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்தில் இருந்து 16ம் திகதி புதன்கிழமை காலை 5.30 மணியளவில் முல்லைத்தீவிற்கு குறித்த தனியார் பேருந்து பயணிகளுடன் சென்றுள்ளது.

இதன் போது குறித்த பேருந்தின் சாரதியாக முருகையா மகேஸ்வரன் மற்றும் நடத்துனராக டெனிஸ் ஆகியோர் கடமையாற்றியுள்ளளனர்.இதன் போது குறித்த பேருந்தில் தர்மபுரம் பகுதியில் வைத்து பெண் ஒருவர் ஏறியுள்ளார். இந்த நிலையில் குறித்த பெண் குறித்த பணப்பை யை தவற விட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த பேருந்தில் பணப்பையை அவதானித்த குறித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் அதை மீட்டு சோதனை செய்த போது குறித்த பணப்பையில் தேசிய அடையாள அட்டை, தங்க செயின் மற்றும் ஒரு தொகை பணம் ஆகியவை காணப்பட்டுள்ளது.

விரைந்து செயற்பட்ட சாரதி மற்றும் நடத்துனர் குறித்த பணப்பையை உடனடியாக மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தில் அதன் தலைவர் ரி.
ரமேஷ் அவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நிலையில் உடனடியாக குறித்த பணப்பையின் உரிமையாளராக குறித்த பெண் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

குறித்த சாரதி மற்றும் நடத்துனர் ஆகிய இருவரின் முன் மாதிரியான செயலை பாராட்டும் வகையில் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சூ. விமலேஸ்வரன் தலைமையில் 17ம் திகதி அன்று வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் எம்.பிரதீப்,மன்னார் நகர சபைத் தலைவர் டானியல் வசந்தன் மற்றும் மன்னார் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் ஆகியோர் இணைந்து ளௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**VIYAPARIMOOLAI NELLANDAI ASSOCIATION – CANADA**

**Est. 1999**

804-11782 Ninth Line, Stouffville ON L4A $5^{E}9$ Telephone Number: 416-454-6360

வியாபாரிமூலை நெல்லண்டை ஒன்றியம் நடாத்தும்

27வது வருடாந்த கோடை கால ஒன்றுகூடல்

காலம்: சனிக்கிழமை, புரட்டாதி மாதம் 12 ஆம் திகதி
இடம்: மிலிக்கன் பார்க் - **'Shelter # '1'**
நேரம்: காலை 9.30மணி தொடக்கம் பி.ப. 8.00 மணிவரை

**Saturday, September 12, 2026**
**Milliken Park – Shelter # '1' (McCowan & Steeles)**
5555 Steeles Ave. E, Scarborough ON M9L 1S7

பல சுவையான உணவுவகைகள் பரிமாறப்படும்.

வழமை போன்று சிறார்கள் பெரியோருக்கான விளையாட்டுப்போட்டிகளும் இடம்பெறும்

வியாபாரிமூலை நெல்லண்டை மக்கள் நண்பர்கள் நலன்விரும்பிகள் யாவரையும் கலந்து சிறப்பிக்கு மாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**நன்றி**

**நிருவாகக்குழு**

தொடர்புகட்கு:

சிவசங்கர்: 416-804-5147
சுந்தரலிங்கம்: 416-454-6360
உருத்திரன்: 647-404-3398

# தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது!

தமிழ் மக்களின் உரிமைக்காக உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த தியாக தீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான "அறிவகத்தில்" பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன் சிவஞானம் அவர்கள் தலைமையில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் தியாகத்தின் உச்சத்தைத் தொட்ட ஒப்பற்ற தியாகியாக, ஒரு துளி நீர்கூட அருந்தாமல் 12 நாட்கள் உண்ணாநோன்பிருந்து தனது இன்னுயிரை மெல்ல மெல்லக் கரைத்து, தமிழினத்தின் விடுதலைக்காக அவர் தந்த இந்த ஆகுதி, தமிழினத்தின் தியாக வரலாற்றில் என்றும் அழியாத சுடராக மிளிர்கிறது.

அறவழியில் தனது உடலையே ஆயுதமாக்கி அவர் காட்டிய இந்த ஒப்பற்ற தியாகம், ஒவ்வொரு தமிழனின் நெஞ்சிலும் உரிமைத் தாகத்தையும் தாய்நிலப் பற்றையும் என்றென்றும் விழித்திருக்கச் செய்யும் தியாகத் தீபமாக விளங்குகிறது.

இவ் நினைவேந்தல் நிகழ்வில், கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் சட்டத்தரணி சுப்பிரமணியன் சுரேன், பிரதேச சபைகளின் உப தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.













# எமது பிராந்தியத்தில் பல்லின மக்கள் ஊடகங்களிடமிருந்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ள பீல் காவல்துறை தலைமையகம் ஆர்வமாக உள்ளது'

## பல்லின பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் பிராந்திய காவல்துறை தலைமை அதிகாரி நசான் துரையப்பா அழைப்பு!



எமது பிராந்தியத்திலுள்ள பல்லின மக்கள் சார்ந்த ஊடகங்களிடமிருந்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக் கொள்வதில் பீல் பிராந்திய காவல்துறை தலைமையகம் மிகவும் ஆர்வமாக உள்ளது. ஏனெனில் எமது பீல் பிராந்தியத்தில் குற்றச் செயல மிகவும் அதிகரித்துள்ளன. எமது பிராந்திய காவல்துறை நிர்வாகத்தில் தலைமை அதிகாரியான என்னுடன் சேர்ந்து நான்கு பிரதி தலைமை அதிகாரிகள் ஒவ்வொரு பிரிவிலும் பணியாற்றுகின்றார்கள். அவர்களின் கட்டுப்பாட்டுக்கு கீழே ஆயிரக்கணக்கான காவல்துறையினர் பணியாற்றுகின்றார்கள். இருந்தும். எமது பிராந்தியத்தில் இடம் பெறும் வீடுகளை உடைத்து கொள்ளையிடுதல், வாகன கட்டுப்பாடு மற்றும் விதிகளை மீறுதல், துப்பாக்கிச் சூடுகள், நிதி மோசடி அப்பாவி மக்களை ஏமாற்றுதல் வாகனத்தை அதி கூடிய வேகத்தில் செலுத்துதல். காவல் துறையினரை துச்சமென மதித்தல் அல்லது புறக்கணித்தல் ஆகிய குற்றச் செயல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. எனவே இவை தொடர்பாக நாம் தென்னாசிய மொழிகள் மற்றும் ஏனைய பல்லினங்கள் பேசும் மொழிகள் சார்ந்த ஊடகவியலாளர்கள் எம்மோடு ஒத்தழைக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்."

இவ்வாறு கடந்த 16ம் திகதி புதன்கிழமை அன்று மிசிசாகா நகரில் அமைந்துள்ள பீல் பிராந்திய காவல்துறையின் தலைமைப் பணிமனையில் நடைபெற்ற பல்லின பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் பிராந்திய காவல்துறை தலைமை அதிகாரி நிசான் துரையப்பா அழைப்பு விடுத்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் பல்லின சமூகங்கள் வாழும் எமது பீல் பிராந்தியத்தில் பல்லினப் பத்திரிகையாளர்களின் சமூக ஈடுபாட்டை நாம் நன்கு அறிவோம். எனவே உங்களிடமிருந்து எமது பிராந்தியத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்கும் ஆலோசனைகளை தொடர்ச்சியாக கருத்துக்களை செவிமடுக்க நாம் ஆர்வத்துடன் உள்ளோம்" என்றார். மேற்படி சந்திப்பில் தமிழ் ஊடகங்கள் சார்பில் "உதயன்" லோகேந்திரலிங்கம் மற்றும் "தேசம்" பத்திரிகை சார்பில் சங்கர் சிவநாதன் மற்றும் விசு கணபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.











உலக செய்திகள்
World News

# இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் காலமானார்



முன்னாள் மத்திய அமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான சுதர்சன நாச்சியப்பன் காலமானார். அவருக்கு வயது 78. சிவகங்கையில் உள்ள இல்லத்தில் உடல்நலக்குறைவால் சுதர்சன நாச்சியப்பன் காலமானார். அவரது மறைவு செய்தி அறிந்து அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

மேலும் சுதர்சன நாச்சியப்பன் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது. இ.எம். சுதர்சன நாச்சியப்பனின் சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம் ஏரியூர். எம்.ஏ.,பி.எல்., படித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றினார். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்து பிஎச்.டி. பட்டம் பெற்றுள்ளார். காங்கிரஸ் பாரம்பரியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

1999ல் மக்களவைக்கு சிவகங்கை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 2000-ஆம் ஆண்டில் தமிழ்நாடு காங்கிரஸ் மனித உரிமைத் துறைத் தலைவராகவும், 2002-ஆம் ஆண்டில் தமிழ்நாடு காங்கிரஸ் துணைத் தலைவராகவும், 2003-ஆம் ஆண்டில் நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சி கொறடாவாகவும், 2004-ல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயலாளராகவும் பதவி வகித்துள்ளார். 2004-ஆம் ஆண்டு முதல் மாநிலங்களவை உறுப்பினராக இருந்து வருகிறார். மாநிலங்களவை தலைமைக் கொறடாவாக பணியாற்றி, மத்திய அமைச்சராக பதவி வகித்துள்ளார். 2013-ம் ஆண்டில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சி காலத்தில் வணிகம் மற்றும் தொழில்துறைக்கான மத்திய இணை அமைச்சராக பதவி வகித்த அனுபவம் கொண்டவர் ஆவார்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மகா கும்பாபிஷேகம் பக்திபூர்வமாக நடைபெற்றது





17 ஆண்டுகளுக்கு பிறகு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது. இதைக்காண லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் கும்பாபிஷேகத்திற்காக பல மாதங்களாக திருப்பணிகள் ரூ.25 கோடி மதிப்பில் நடந்தன. தீ விபத்தில் சேதம் அடைந்த வீரவசந்தராயர் மண்டபம் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டது. யாகசாலை பூஜைக்காக வடக்கு ஆடி வீதியில் 184 குண்டங்க ளுடன் பிரமாண்ட யாகசாலை அமைக்கப்பட்டது. மூலவர் மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரருக்காக பிரத்யேக தங்க குடங்கள் யாக சாலையில் வைக்கப்பட்டன. கங்கை, யமுனை, 1 காவேரி, வைகை உள்ளிட்ட பல்வேறு நதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட புனிதநீரை கலசங்களில் நிரப்பி யாகசா லையில் வைத்து தினமும் பூஜைகள் நடந்து வந்தன. 400-க்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் வேள்விகளை நடத்தினர்.

கடந்த 11-ந் தேதியன்று முதல்கால யாக பூஜைகள் தொடங்கிய நிலையில், மற்ற கால பூஜைகளும் நடந்து வந்தன. நேற்று அதிகாலை 3.45 மணி அளவில் 10-ம்கால யாகசாலை பூஜைகள் நடந்தன. அந்த வழிபாடு நிறைவு பெற்ற பிறகு பரிவார தெய்வங்களுக்கான கும்பாபிஷேகம் தொடங்கியது. மேளதாளங்கள் முழங்க யானை, டங்கா மாடு அணிவகுத்து செல்ல யாகசாலையில் இருந்து புனிதநீர் கலசங்கள் புறப்பாடாகி கோவிலுக்குள் உள்ள பரிவார தெய்வங்கள் சன்னதிக்கு கொண்டு செல்லப்பட்டன. காலை 5 மணி முதல் 6 மணிக்குள் சித்தி விநாயகர், கூடல்குமாரர், தட்சிணாமூர்த்தி. துர்க்கை, மகாலட்சுமி, பத்திரகாளி, அக்னி வீரபத்திரர், 63 நாயன்மார்கள், நவகிரகங்கள் உள்பட 414 பரிவார தெய்வங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடந்தது. மூலவர் மீனாட்சி அம்மன்-சுந்தரேசுவரர், தங்க விமானங்கள், சன்னதி விமானங்கள், 12 கோபுரங்கள் உள்ளிட்டவற்றுக்கான கும்ப கலசங்களுக்கு நேற்று மாலை 11-ம் கால யாகசாலை பூஜைகள் நடந்தன. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். விழாவின் சிகரமாக மீனாட்சி அம்மன்-சுந்தரேசுவரர் மகா கும்பாபிஷேக விழா காலை கோலாகலமாக நடைபெற்றது. வேத மந்திரங்கள் ஒலிக்க கலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டது. மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தையொட்டி மதுரை மாநகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.



# இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைப்படுத்துவதற்கான சட்டத்துக்கு நியூசிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது

இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டத்துக்கு நியூசிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது. 93 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 29 பேர் எதிராகவும் வாக்களித்தனர். எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியும் இந்த சட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், நியூசிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் சுமார் 95 சதவீதத்துக்கு சுங்க வரி முழுமையாக நீக்கப்படும் அல்லது கணிசமாக குறைக்கப்படும். ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தவுடன், இதில் இடம்பெறும் பாதிக்கும் மேற்பட்ட பொருட்களுக்கு உடனடியாக சுங்க வரி இல்லாத நிலை ஏற்படும். அதேபோல், இந்தியாவில் இருந்து நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் சுங்க வரி இல்லாத சந்தை அணுகலை நியூசிலாந்து வழங்குகிறது.

இந்த ஒப்பந்தத்தின் மற்றொரு முக்கிய அம்சமாக, அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் 20 பில்லியன் நியூசிலாந்து டாலர் முதலீடு செய்ய நியூசிலாந்து ஒப்புக்கொண்டுள்ளது. இந்தியாவும் நியூசிலாந்தும் கடந்த ஏப்ரல் மாதம் இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இரு நாடுகளும் தங்களது உள்நாட்டு ஒப்புதல் நடைமுறைகளை நிறைவு செய்த பிறகு இந்த ஒப்பந்தம் அமலுக்கு வரும். 2026 ஜூன் வரையிலான ஓராண்டில், இந்தியா-நியூசிலாந்து இடையிலான இருதரப்பு வர்த்தகம் 3.99 பில்லியன் நியூசிலாந்து டாலராக இருந்தது. நியூசிலாந்தின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான 9-வது பெரிய ஏற்றுமதி சந்தையாக இந்தியா உள்ளது.

# காசாவில் அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர்



காசாவில் அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 20 பேர் உயிரிழந்தனர். பாலஸ்தீனம் மேற்கு கரை, காசா முனை என இரு பகுதிகளாக உள்ளது. இதில் மேற்கு கரையை முகமது அப்பாஸ் தலைமையிலான அரசு நிர்வகித்து வருகிறது. காசா முனையை ஹமாஸ் ஆயுதக்குழுவினர் நிர்வகித்து வருகின்றனர். இதனிடையே, கடந்த 2023ம் ஆண்டு ஹமாஸ் ஆயுதக்குழுவினர் இஸ்ரேல் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இதையடுத்து, ஹமாஸ் மீது போர் தொடுத்த இஸ்ரேல், காசா முனை மீது அதிரடி தாக்குதல் நடத்தியது. இந்த போரில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில் அமைதி ஒப்பந்தம் மூலம் போர் முடிவுக்கு வந்துள்ளது. போரின்போது காசாவின் பல கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமான நிலையில் பல கட்டிடங்கள் கடுமையான சேதமடைந்துள்ளன. அந்த சேதமடைந்த கட்டிடங்களிலும் மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், காசா முனையில் உள்ள காசா சிட்டியில் 6 மாடிகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு இருந்தது. இந்த கட்டிடம் இஸ்ரேல், ஹமாஸ் போரில் கடுமையாக சேதமடைந்தது. ஆனாலும், அந்த கட்டிடத்தில் மக்கள் வசித்து வந்தனர். இந்த அடுக்குமாடி கட்டிடம் திடீரென இடிந்து விழுந்தது. இந்த சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உள்பட பொதுமக்கள் 20 பேர் உயிரிழந்தனர்.

# இந்தியா மீது 100 சதவீதம் வரி விதிக்க அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது




ரஷியா மீதான பொருளாதார தடைகள் மசோதாவை நிறைவேற்ற அமெரிக்கா அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது. இதனால் இந்தியா மீது 100 சதவதம் வரி விதிக்கப்படுவதற்கான வாய்ப்பு உயர்ந்துள்ளது. இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 30 சதவீதம் ரஷியாவிடமிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. ஈரான் போர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஜூலை மாதத்தில் நாட்டின் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட எண்ணெய் இறக்குமதி ரஷியாவில் இருந்தே நடந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த ஆகஸ்டில் அமெரிக்காவில் ரஷியா மற் றும் ஈரான் மீது பொருளாதார தடைகளை விதிக்கும் வகையில் மறைந்த எம்.பி. லிண்ட்சே ஓ. கிரஹாம் ரஷியாவுக்கு எதிரான தடை மசோதா 2026) என்ற மசோதாவை செனட் சபையில் (மேலவை) அறிமுகப்படுத்தினார். இந்த மசோதா, செனட் சபையால் ஏற்கனவே கடந்த ஆகஸ்டு மாதம் நிறைவேற்றப்பட்டது. தற்போது பிரதிநிதிகள் சபையில் (கீழவை) 214-211 என்ற கணக்கில் முதல்கட்ட நடைமுறை வாக்கெடுப்பில் வெற்றி பெற்று, இறுதி வாக்கெடுப்பை நோக்கி தீவிரமடைந்துள்ளது. இந்த மசோதா தொடர்பாக நடைபெற்ற விதிகள் குழு கூட்டத்தில், 7-க்கு 3 என்ற வாக்குகள் அடிப்படையில் மசோதாவை நாடாளுமன்றத்தின் இறுதி வாக்கெடுப்பிற்கு முன்னெடுத்துச் செல்ல முடிவு செய்யப்பட்டது. பிரதிநிதிகள் சபையின் இறுதி ஒப்புதல் கிடைத்தவுடன், இரு அவைகளின் கூட்டு ஒப்புதலுடன் இது ஜனாதிபதியின் கையெழுத்துக்கு அனுப்பப்படும்.

இந்த மசோதா மீது அமெரிக்க மக்களவையில் வாக்கெடுப்பு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த மசோதா நிறைவேற் றப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கையெழுத்திட்டால், ரஷிய எரிசக்தியை அதிகளவில் வாங்கும் நாடுகளுக்கு 100 சதவீதம் வரை வரி விதிக்கும் அதிகாரம் அவருக்கு கிடைக்கும். ரஷிய கச்சா எண்ணெயை வாங்கும் 2-வது பெரிய நாடாக இந்தியா இருப்பதால், இந்த மசோதா இந்தியாவுக்கு பெரும் சவாலாக அமைய வாய்ப்புள்ளது. இந்த விவகாரத்தை கவனித்து வரும் மத்திய வெளியுறவுத்துறை மூத்த அதிகாரிகள் இதுகுறித்து கூறுகையில், "இந்திய அரசு இந்த முன்னேற்றங்களை மிகவும் உன்னிப்பாக கவனித்து வருகிறது. அமெரிக்க மக்களவையில் இந்த மசோதா மீது வாக்கெடுப்பு நடைபெற்ற பிறகுதான். அடுத்து என்ன நடக்கும் என்பது குறித்த தெளிவு கிடைக்கும். அதன் பிறகுதான் இது தொடர்பாக உரிய பதிலை இந்தியா அளிக்கும்" என்று தெரிவித்தனர்.

*(7ம் பக்கத் தொடர்ச்சி)*

**UNP மற்றும் Rajapaksa ஆட்சிகள் இரண்டிலும் ஆட்சியாளர்களை பரஸ்பரம் பாதுகாக்கும் ஒரு வகையான அரசியல் ஒப்புமை இருந்ததாக அவர் கருத்து தெரிவிக்கிறார்.**

JVP/NPP அரசாங்கம் ஊழலுக்கு எதிரான தனது வாக்குறுதியை எவ்வளவு உண்மையாக செயல்படுத்துகிறது என்பது இன்னும் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று என ஆசிரியர் எழுதுகிறார்.

ஆனால் இந்த குறிப்பிட்ட Airbus விவகாரத்தில் தற்போதைய அரசாங்கத்திற்கு நேரடியான அரசியல் சுமை இல்லை என்று அவர் கருத்து தெரிவிக்கிறார்.

அதேநேரம், VFS Global visa விவகாரம் போன்ற பிற சர்ச்சைகளையும் அரசாங்கமும் CIABOC-மும் அதே தீவிரத்துடன் விசாரிக்குமா என்பது வேறு கேள்வி என ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

எதிர்க்கட்சியான SJB-வும் அந்த விவகாரத்தில் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆசிரியர் தனது கருத்தை பதிவு செய்கிறார்.

Sapphire Banquet & Catering
Specializing in Videography & Photography
- Anniversary Party - Birthdays - Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers
SHIVA SUBRAMANIAM (647) 406-4868

**Namal Rajapaksa கைது செய்யப்பட்டதற்கு எதிராக சில எதிர்க்கட்சிகள் வெளியிட்ட எதிர்ப்பை ஆசிரியர் கடுமையாக விமர்சிக்கிறார்.**

குறிப்பாக UNP உள்ளிட்ட தரப்புகள் இந்த கைது நடவடிக்கைக்கு எதிராக பேசுவதை, பழைய அரசியல் அமைப்பில் அதிகாரத்தில் இருந்தவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பாதுகாக்கும் பழக்கத்தின் தொடர்ச்சியாக அவர் விவரிக்கிறார்.

UNP வெளியிட்ட அறிக்கையில், "நவீன நாகரிகமான எந்த சமூகமும் ஒருவரை இவ்வாறு ஜனநாயக உரிமைகளிலிருந்து விலக்குவதை ஏற்காது" என்றும், "Gen Z தலைமுறை இத்தகைய நடவடிக்கையை கடுமையாக எதிர்க்கும்" என்றும் கூறப்பட்டதாக கட்டுரை குறிப்பிடுகிறது.

பின்னர் ஆசிரியர் மீண்டும் இலங்கை அரசியலில் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஒருவரை "அரசியல் பலியாகவும் நாயகனாகவும்" மாற்றும் பழக்கம் இருப்பதாக விமர்சிக்கிறார்.

விளக்கமறியலில் இருக்கும் Namal Rajapaksa, Nelson Mandela-வை மேற்கோள் காட்டுவதாகவும் கட்டுரை குறிப்பிடுகிறது.

அரசாங்கத்திற்கு நீதித்துறை நடவடிக்கைகளின் நம்பகத்தன்மையையும் CIABOC மற்றும் பிற விசாரணை அமைப்புகளின் சுயாதீனத்தன்மையையும் பாதுகாக்க வேண்டிய கடமை உள்ளது என ஆசிரியர் எழுதுகிறார்.

நீதித்துறை அல்லது CIABOC மீது திட்டமிட்ட தவறான குற்றச்சாட்டு/அவதூறு முன்வைக்கப்பட்டால் அவை சட்டரீதியாக எதிர்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவிக்கிறார்.

அதேவேளை, தீங்கிழைக்கும் அவதூறு மற்றும் சட்டபூர்வமான விமர்சனம் ஆகியவற்றை வேறுபடுத்துவது சில நேரங்களில் கடினமாக இருக்கலாம்; அதனை தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றங்களாக இருக்க வேண்டும் என ஆசிரியர் கூறுகிறார்.

சுயாதீன அரச நிறுவனங்கள் மீது தனிப்பட்ட அல்லது அரசியல் நலன்களுக்காக அழுத்தம் செலுத்த அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

கடந்த காலத்தில் JVP-யும் இதுபோன்ற தவறுகளை செய்துள்ளது என்று ஆசிரியர் நினைவூட்டுகிறார். எனினும், இலங்கை தனது நிறுவனங்களின் நம்பகத்தன்மையை வலுப்படுத்த வேண்டுமெனில் இத்தகைய நடைமுறைகள் சட்டத்தின் முன் பொறுப்புக்கூறச் செய்யப்பட வேண்டும் என்பதே கட்டுரையின் இறுதி பகுதியில் முன்வைக்கப்படும் கருத்தாகும்.

**'நாமல் ராஜபக்சவின் Airbus விவகாரம்" Daily Mirror கருத்துக் கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு -- எழுதியவர்: Ranga Jayasuriya**

------------------------------------------------------------



சினிமா நியூஸ்

# கன்னட நடிகர் ஆனந்த் நாகிற்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்படுகிறது



இந்திய சினிமாவில் உயர்ந்த விருதாக கருதப்படும் தாதா சாகேப் பால்கே விருது, கன்னட சினிமாவின் பிரபல நடிகர் ஆனந்த் நாக்கிற்கு வழங்கப்படுகிறது. கன்னட சினிமாவின் பிரபல நடிகர் ஆனந்த் நாக். 50 ஆண்டுகளில் 300க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இன்றைய சினிமா ரசிகர்களுக்கு சொல்ல வேண்டும் என்றால் கேஜிஎப் 1 திரைப்படத்தில் அந்த கதையை விவரிக்கும் கதாபாத்திரத்தில் நடித்தார். கன்னடத்தில் 1973ல் சங்கல்பா திரைப்படத்தின் மூலம் நாக் தனது முதல் திரைப்படத்தில் அறிமுகமானார். தொடர்ந்து ஹம்சகீதே, சந்தனத கொம்பே, கணேஷனா மதுவே உள்ளிட்ட பல்வேறு வெற்றி படங்களில் நடித்தார். கன்னட சினிமா தாண்டி தெலுங்கு, இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளிலும் நடித்துள்ளார். இந்திய சினிமாவுக்கு இவர் செய்த பங்களிப்பைப் கவுரவிக்கும் விதமாக மத்திய அரசு சார்பில் 2024ம் ஆண்டுக்கான இந்திய சினிமாவின் உயரிய விருதான தாதா சாகேப் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 22-ம் தேதி குஜராத்தில் நடக்கும் விழாவில் இந்த விருதை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு கையால் ஆனந்த் நாக் பெறுகிறார்.

# அஜித் நடிக்கும் "டேர் டெவில்" படத்தின் படப்பிடிப்பு நவம்பர் 2ம் தேதி ஆரம்பம்



அஜித், இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் கூட்டணியில் உருவாக உள்ள டேர் டெவில் படத்தின் படப்பிடிப்பு நவம்பர் 2 ம் தேதி தொடங்குகிறது. சினிமாவுடன் கார் பந்தயத்திலும் தீவிர ஆர்வம் கொண்டுள்ள அஜித், "குட் பேட் அக்லி" படத்திற்குப் பிறகு மீண்டும் சர்வதேச ரேசிங் போட்டிகளில் முழு கவனம் செலுத்தி வருகிறார். தனது சொந்த அணியான "அஜித்குமார் ரேசிங்" மூலம் பல்வேறு சர்வதேச தொடர்களில் பங்கேற்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்து வருகிறார்.

இதற்கிடையில், அஜித்தின் சர்வதேச மோட்டார் ஸ்போர்ட்ஸ் பயணத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள "கிளாடியேட்டர்ஸ் இன் பர்சூட் ஆஃப் சேலஞ்சஸ்" ஆவணப்படத்தை இயக்குநர் ஏ.எல். விஜய் இயக்கியுள்ளார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இந்த படம் விரைவில் வெளியாக உள்ளது. அதனை தொடர்ந்து, "குட் பேட் அக்லி" படத்தைத் தொடர்ந்து இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரனுடன் அஜித் மீண்டும் இணைந்துள்ளார். அஜித்தின் 64-வது திரைப்படமாக உருவாக உள்ள இந்தப் படத்திற்கு "டேர் டெவில்" என்று பெயரிடப்பட்டுள்ளது. பிரேவ் ஹார்ட்ஸ் புரடக்ஷன்ஸ் என்கிற பெயரில் ஷாலினி அஜித்குமார் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். மேலும், இப்படத்தில் பிரபல மலையாள நடிகர் மோகன்லால் மற்றும் தெலுங்கு நடிகர் வெங்கடேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் "டேர் டெவில்" படத்தின் படப்பிடிப்பு நவம்பர் 2 அன்று தொடங்கவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# "பாரத ரத்னா" எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் படத்தை கமல்ஹாசன் ஆரம்பித்து வைத்தார்



இந்திய இசை உலகின் மாபெரும் ஆளுமையான பாரத ரத்னா எம்.எஸ். சுப்புலட்சுமியின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படத்தை உலகநாயகன் கமல்ஹாசன் தொடங்கி வைத்தார்.

இப்படத்தில் எம்.எஸ். சுப்புலட்சுமி அம்மாவின் கதாபாத்திரத்தில் முன்னணி நடிகை ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார். கவுதம் தின்னூரி இயக்க அனிருத் இசையமைக்கிறார். விழாவில் பேசிய கமல்ஹாசன், இந்த பாத்திரத்தில் நடிப்பது ராஷ்மிகாவுக்கு எவ்வளவு பெரிய சவால் என்பதை உலகப் புகழ்பெற்ற மைக்கேல் ஜாக்சனுடன் ஒப்பிட்டுப் பேசினார். "மைக்கேல் ஜாக்சனின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் நடிக்கும் ஒரு நடிகருக்கு எந்த அளவுக்கு பதற்றமும் அழுத்தமும் இருக்குமோ, அதே போன்ற ஒரு பதற்றம் உங்களுக்கும் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால், உங்களை வழிநடத்த ஒரு சிறந்த குழு இருக்கிறது, அவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்."

மேலும், தன் வழக்கமான நகைச்சுவை பாணியில் பேசிய அவர், "என்னால் கூட இந்த பாத்திரத்தை செய்திருக்க முடியாது, என் தாடியை எடுத்தால் கூட இந்த பாத்திரத்தில் என்னால் நடிக்க இயலாது. நான் எத்தனை வேடங்கள் வேண்டுமானாலும் போடலாம், ஆனால் எம்.எஸ். அம்மா அவர்களின் கண்களில் இருக்கும் அந்தப் பேரன்பையும் கருணையையும் உங்கள் கண்களில் கொண்டு வந்துவிட்டால், நீங்கள் பாதியைக் கடந்துவிட்டீர்கள் என்று அர்த்தம். துணிச்சலோடு இதைச் செய்யுங்கள்" என்று ராஷ்மிகாவுக்கு தைரியம் ஊட்டினார். எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் கலைப் பயணம் குறித்துப் பேசிய கமல், "சினிமாவோ அல்லது அரசியலோ நாட்டை இணைப்பதற்கு முன்பே, தனது இசையால் ஒட்டுமொத்த இந்தியாவையும் ஒன்றிணைத்த ஒரு கலாச்சார சக்தி அவர். இந்தியாவின், குறிப்பாக தென்னிந்தியாவின் மிக முக்கிய அடையாளமாகத் திகழ்ந்த அவர், அந்த காலத்திலேயே சமஸ்கிருதம், இந்தி எனப் பல மொழிகளில் பாடிய ஒரு அகில இந்திய சூப்பர் ஸ்டார்" என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். விழா மேடையில் உணர்ச்சிவசப்பட்டு கண்கலங்கிய நடிகை ராஷ்மிகா மந்தனா பேசினார். "இப்போது என் இதயத்தில் இருக்கும் ஒரே உணர்வு நன்றியுணர்வு மட்டும்தான். எம்.எஸ். அம்மா அவர்களின் குரலில் ஒரு தனித்துவமான தெய்வீக சக்தி இருக்கிறது. அதைக் கேட்கும்போது கடவுளின் முன்னிலையில் அமர்ந்திருப்பது போன்ற உணர்வு ஏற்படும். அம்மா, உங்களது வாழ்வின் ஒரு சிறிய பகுதியாக இருக்க என்னை தேர்ந்தெடுத்ததற்கு நான் எப்போதும் கடமைப்பட்டிருக்கிறேன். எனது நூறு சதவீத உழைப்பையும், சிறந்த நடிப்பையும் இதற்கு வழங்குவேன் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்." என்று ஆனந்த கண்ணீருடன் பேசினார்.

# அர்ஜுன் தாஸ் நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியது




ரஞ்சித் ஜெயக்கொடி இயக்கத்தில் அர்ஜுன் தாஸ், ப்ரீத்தி பகடாலா உள்ளிட்டோர் நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியது. அர்ஜுன் தாஸ் நடிப்பில் வெளியான "கைதி" திரைப்படம் மூலம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றவர் அர்ஜுன் தாஸ். லோகேஷ் கனகராஜ் இயக்கிய இந்த படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்ததற்காக தமிழக அரசின் சிறந்த வில்லன் நடிகர் விருதையும் பல்வேறு திரைப்பட விருதுகளையும் பெற்றார். இதனைத் தொடர்ந்து மாஸ்டர், விக்ரம் உள்ளிட்ட படங்களில் நடித்ததன் மூலம் தனக்கென தனி ரசிகர் பட்டாளத்தை உருவாக்கினார். மேலும், அநீதி, ரசவாதி மற்றும் போர் போன்ற படங்களிலும் நடித்துள்ளார். அர்ஜுன் தாஸ் நடித்த கான் சிட்டி, ஒன்ஸ்மோர் திரைப்படங்கள் சமீபத்தில் வெளியாயின.

ரஞ்சித் ஜெயக்கொடி இயக்கத்தில் நடிகர் அர்ஜுன் தாஸ் கதாநாயகனாக நடிக்கும் திரைப்படம் அறிவிக்கப்பட்டுள்ளது. ரஞ்சித் ஜெயக்கொடி "இஸ்பேட் ராஜாவும் இதய ராணியும்", "மைக்கேல்" திரைப்படங்களை இயக்கியுள்ளார். இப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைக்கிறார். ப்ரீத்தி பகதாலா கதாநாயகியாக தமிழ் திரையுலகில் அறிமுகமாகிறார். குடும்பம் மற்றும் உறவுகளை மையமாகக் கொண்டு உருவாகும் இப்படம், காதல், குடும்ப உணர்வுகள், நகைச்சுவை மற்றும் வலுவான கதாபாத்திரங்களை உள்ளடக்கிய பேமிலி ரொமான்ஸ் டிராமாவாக உருவாகிறது.

# சமுத்திரக்கனி நடித்த "கஸ்தூரி வீடு" படத்தின் முன்னோட்டம் வெளியானது



சமுத்திரக்கனி நடித்த "கஸ்தூரி வீடு" படத்தின் முன்னோட்டம் வெளியானது. சமுத்திரக்கனி தமிழ் சினிமாவில் நடிகர், இயக்குநர், எழுத்தாளர் என பன்முக திறமையுடன் பயணித்து வருபவர். இயக்குநர் கே.பாலசந்தரிடம் உதவி இயக்குநராக பணியாற்றினார். நடிகராகவும் பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார். குறிப்பாக "விசாரணை" படத்தில் காவல் அதிகாரியாக நடித்ததற்காக தேசிய விருது பெற்றுள்ளார்.

இந்த நிலையில், நடிகர் சமுத்திரக்கனி தற்போது "கஸ்தூரி வீடு" என்ற புதிய படத்தில் நடித்து வருகிறார். விஜய் ஆர். ஆனந்த் இயக்கும் இப்படம் அறிவியல் புனைகதை, திகில் மற்றும் நகைச்சுவை கலந்த படமாக உருவாகி வருகிறது. ஒரு மர்மமான வீடு, அதற்குள் மறைந்திருக்கும் பயங்கர ரகசியம், ஆயிரம் ஆண்டுகள் பழமையான சாத்தான் என வித்தியாசமான கதைக்களத்துடன் இப்படம் உருவாகி வருகிறது. இப்படத்தில் சமுத்திரக்கனியுடன் டேவிட் டிட்டோ, தனுஜா மதுரபந்துலா, ஸ்ரீ வர்ஷத் ஆனந்த், தம்பி ராமையா, யோகி பாபு உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இந்த நிலையில், சமுத்திரக்கனி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள இந்த படத்தின் முன்னோட்டம் வெளியாகி உள்ளது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# இவ்வார ராசிபலன்

**18-09-2026 வெள்ளி தொடக்கம் 24-09-2026 வியாழன் வரையும்**



ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமாள் கோவில்ரயில் வேகேட் (வழி), வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +917788994666





**மேஷம்:** இந்த வாரம் உங்களுக்கு முன்னேற்றம் மற்றும் புதிய நம்பிக்கையை வழங்கும் காலமாக அமையும். நீண்ட நாட்களாக தடைபட்டு வந்த முக்கியமான காரியங்கள் மீண்டும் வேகம் பெறும். வேலைக்குச் செல்வோருக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் பாராட்டும் கிடைக்கும். உங்கள் திறமை வெளிப்பட்டு புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சக ஊழியர்களுடன் நல்லுறவு ஏற்படும். தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் கிடைத்து மனநிறைவு ஏற்படும். புதிய வாடிக்கையாளர்கள் மற்றும் புதிய தொடர்புகள் மூலம் வருமானம் அதிகரிக்கலாம்.குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன் மனைவி இடையே இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கலாம். காதல் வாழ்க்கையில் அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்படுங்கள். நண்பர்களின் உதவியால் முக்கியமான ஒரு காரியம் வெற்றிகரமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் சிறிய சோர்வு ஏற்படலாம் என்பதால் போதிய ஓய்வும் சரியான உணவும் அவசியம். மாணவர்கள் கவனச்சிதறலை தவிர்த்து திட்டமிட்டு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். புதிய முயற்சிகளை தைரியமாக தொடங்கலாம். மனதில் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு செயல்பட்டால் எதிர்பார்த்த வெற்றிகளை அடைவீர்கள். பண விஷயங்களில் திட்டமிட்டு செயல்படுவது எதிர்கால பாதுகாப்பை அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்ட எண்: 9.
அதிர்ஷ்ட நாட்கள்: செவ்வாய், ஞாயிறு. இந்த வார மதிப்பெண்: 8/10.




**ரிஷபம்:** இந்த வாரம் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல மாற்றங்கள் ஏற்படும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வேலை செய்யும் இடத்தில் உங்கள் திறமைக்கும் உழைப்புக்கும் பாராட்டு கிடைக்கும். முக்கியமான பொறுப்புகள் உங்களைத் தேடி வரலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து வருமானம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளை தொடங்குவதற்கு சாதகமான சூழல் அமையும். பணவரவில் முன்னேற்றம் இருக்கும். பழைய கடன் அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பான பிரச்சனைகளில் நல்ல தீர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன் மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் கிடைக்கும். காதல் உறவில் இருந்த தயக்கங்கள் விலகி நெருக்கம் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் ஆர்வத்துடன் செயல்பட்டால் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். உடல்நிலையில் பெரிய பிரச்சனைகள் இருக்காது. தூக்கம் மற்றும் உணவு முறையில் கவனம் தேவை. நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். முக்கியமான காரியங்களில் அனுபவமுள்ளவர்களின் ஆலோசனை உதவியாக இருக்கும். கோபத்தை தவிர்த்து பொறுமையுடன் செயல்படுங்கள். இந்த வாரம் உங்கள் விடாமுயற்சி நிச்சயம் வெற்றியைத் தேடித்தரும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்ட எண்: 6.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளிக்கிழமை. இந்த வார மதிப்பெண்: 9/10.




**மிதுனம்:** இந்த வாரம் எங்கு சென்றாலும் உங்கள் திறமை வெளிப்படும். நீண்ட நாட்களாக முயற்சி செய்து வந்த ஒரு முக்கியமான காரியம் இப்போது கைகூடும். வேலை செய்யும் இடத்தில் புதிய பொறுப்பு கிடைக்கலாம். மேலதிகாரிகளின் பாராட்டும் ஆதரவும் கிடைப்பதால் உங்கள் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாகி, வருமானத்தை உயர்த்தும் வாய்ப்புகள் உருவாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பண விஷயத்தில் அதிர்ஷ்டம் கை கொடுக்கும். திடீரென கிடைக்கும் பணவரவு உங்களை ஆச்சரியப்படுத்தலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன் மனைவி உறவில் அன்பும் நெருக்கமும் கூடும். பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாக எடுக்கும் முடிவுகள் நல்ல பலனைத் தரும். காதல் உறவில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கலாம். மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும். உடல்நிலையில் பெரிய பாதிப்பு இல்லாவிட்டாலும், மன அழுத்தத்தை குறைத்து போதுமான ஓய்வு எடுக்கவும். நண்பர்கள் மூலம் முக்கியமான உதவி கிடைக்கும். வெளிநாடு அல்லது தொலைதூர பயணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக நகரலாம். தேவையற்ற வாக்குறுதிகளை கொடுக்காமல், பேசும் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள். வார இறுதியில் உங்களுக்கு சாதகமான செய்தி ஒன்று கிடைக்கும். மொத்தத்தில் இந்த வாரம் முயற்சிக்கு பலன், பணத்திற்கு முன்னேற்றம், வாழ்க்கையில் புதிய நம்பிக்கை தரும் சிறப்பான வாரமாக அமையும். துணிச்சலுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 5.
அதிர்ஷ்ட நாள்: புதன்கிழமை. இந்த வார மதிப்பெண்: 9/10.




**கடகம்:** இந்த வாரம் அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் திரும்பும் வாரமாக அமையும். எவ்வளவு முயற்சி செய்தும் தாமதமான காரியங்கள் இனி ஒவ்வொன்றாக நிறைவேறும். வேலை செய்யும் இடத்தில் உங்கள் திறமை வெளிப்பட்டு, முக்கியமான பொறுப்புகள் கிடைக்கலாம். மேலதிகாரிகளின் பாராட்டும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் மனதிற்கு உற்சாகம் தரும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். பழைய வாடிக்கையாளர்கள் மீண்டும் தொடர்பு கொள்வதால் வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவு கிடைத்து, சில முக்கிய செலவுகளை சமாளிக்க முடியும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த மகிழ்ச்சியான செய்தி வந்து சேரும். கணவன் மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடுகள் பெருமை தரும். காதல் வாழ்க்கையில் இனிமையான தருணங்கள் உருவாகும். மாணவர்கள் கவனமாக படித்து முயற்சி செய்தால் சிறந்த பலனை பெறுவார்கள். உடல்நிலையில் சிறிய சோர்வு இருந்தாலும் அன்றாட பணிகளை சிறப்பாக செய்ய முடியும். தூக்கம், உணவு விஷயத்தில் மட்டும் கவனம் தேவை. நண்பர்கள் மூலம் முக்கியமான உதவி கிடைக்கும். இந்த வாரம் உங்கள் விடாமுயற்சி வெற்றியாக மாறும். பணம், தொழில், குடும்பம் என மூன்று முக்கிய விஷயங்களிலும் முன்னேற்றம் கிடைக்கும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் இந்த வாரத்தை உங்களுக்கு சாதகமான வாரமாக மாற்றிக்கொள்ளலாம்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை. அதிர்ஷ்ட நாள்: திங்கட்கிழமை.
இந்த வார மதிப்பெண்: 9/10.




**சிம்மம்:** இந்த வாரம் உங்களுக்கு சூரிய பலத்தால் மிகவும் பிரகாசமான வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும் லாபம் அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாடிக்கையாளர்கள் பெருகுவர் வெளிநாட்டு வாய்ப்பு கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும் மேலதிகாரிகள் பாராட்டுவர் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும் சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு சொத்து சேரும். வெளிநாடு போக நினைப்பவர்களுக்கு விசா வேலை முடியும் இது தான் நல்ல சான்ஸ் இருபது இருபத்தி ஒன்று தேதிகளில் திடீரென பணம் கைக்கு வரும் குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கூடும் பூர்வீக சொத்து பிரச்சனை பேசி தீரும் விருந்து விசேஷம் நல்ல சாப்பாடு உண்டு வங்கி இருப்பு உயரும் உங்கள் வாயாலேயே நீங்கள் ஜெயிப்பீர்கள் இருபத்தி இரண்டு இருபத்தி மூன்று தேதிகளில் நீங்கள் ஹீரோ போல் ஜொலிப்பீர்கள் புது டிரஸ் புது நகை வாங்குவீர்கள் காதல் விஷயம் கைகூடும் திருமணம் பேசலாம் கணவன் மனைவி ஒற்றுமை அதிகரிக்கும் பெண்களால் லாபம் கிடைக்கும் கலைத்துறையில் இருப்பவர்களுக்கு புகழ் வரும் இருபத்தி நான்கு அன்று வீடு வாகனம் வாங்கும் யோகம் உண்டு கோர்ட் கேஸில் வெற்றி கிடைக்கும் தாயார் உடல் நலம் தேறும் தைரியம் அதிகரிக்கும் புது வீடு கட்ட ஆரம்பிக்கலாம் இந்த வாரம் முழுக்க ஞாயிறு காலை சூரியனை வணங்கினால் எல்லாம் நல்லதாகவே நடக்கும்.

அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு செவ்வாய். அதிர்ஷ்ட எண்: 1.
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு. இந்த வார மதிப்பெண்: 95%.




**கன்னி:** இந்த வாரம் உங்களுக்கு புதன் பலத்தால் மிகவும் யோகமான வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும் லாபம் அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாடிக்கையாளர்கள் பெருகுவர் வெளிநாட்டு வாய்ப்பு கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும் மேலதிகாரிகள் பாராட்டுவர். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும் சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும் பிள்ளைகளால் பெருமை வரும் சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும் காதல் உறவு இனிக்கும். நண்பர்கள் உதவுவர். உடல்நலத்தில் சிறு சோர்வு தலைவலி வரலாம் நீர் அதிகம் பருகவும் ஓய்வு அவசியம் கார உணவை தவிர்க்கவும். நீங்க எதை சொன்னாலும் எல்லாரும் கேட்பாங்க. ஆபீஸ்ல உங்களுக்கு பெரிய மரியாதை கிடைக்கும். புது பொறுப்பு தேடி வரும். குடும்பத்தில் வீண் சண்டை வரலாம் பேச்சில் கவனமா இருங்க. யாருக்கும் கடன் கொடுக்காதீங்க, பணம் திரும்ப வராது. வண்டி ஓட்டும் போது கவனம் தேவை. 22, 23 தேதிகளில் தான் உங்களுக்கு ஜாக்பாட். தொட்டதெல்லாம் லாபம். புது வேலை கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து நல்ல செய்தி வரும். தூக்கம் நல்லா வரும். எதிரிகள் காணாம போயிடுவாங்க. 24 அன்று பண மழை தான். சம்பளம் உயரும். கடன் அடையும். குடும்பத்துடன் கோவிலுக்கு போவீங்க. காதல் விஷயம் ஜெயிக்கும்.

அதிர்ஷ்ட நாள்: புதன் வெள்ளி. அதிர்ஷ்ட எண்: 5.
அதிர்ஷ்ட நிறம்: பச்சை. இந்த வார மதிப்பெண்: 88%.




**துலாம்:** இந்த வாரம் உங்களுக்கு சுக்கிர பலத்தால் மிகவும் இனிமையான வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக்கையாளர்கள் பெருகுவர். வெளிநாட்டு வாய்ப்பு கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும். கடன் சுமை தீரும். சேமிப்பு உயரும். வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. நகை சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை வரும். சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும். காதல் உறவு இனிக்கும். நண்பர்கள் உதவுவர். உடல்நலத்தில் சிறு சோர்வு வரலாம். நீர் அதிகம் பருகவும். ஓய்வு அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும், யாரையும் நம்பி பணம் கொடுக்காதீங்க. ஆனால் வெளிநாட்டு வேலைக்கு முயற்சி பண்றவங்களுக்கு இது தான் சரியான நேரம். விசா கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும். அரசாங்க வேலைக்கு நல்ல செய்தி வரும். 22, 23 தேதிகளில் கொஞ்சம் உஷார். குடும்பத்தில் சண்டை வரலாம். காரமா பேசாதீங்க. பண விஷயத்தில் கவனம். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடாதீங்க. 24 அன்று தான் உங்களுக்கு ஜாக்பாட். பணம் கொட்டும். புது வருமானம் வரும். நண்பர்களால் உதவி கிடைக்கும். காதல் கைகூடும். மொத்தத்தில் முதல் இரண்டு நாள் பொறுமை காத்தால் கடைசி 5 நாள் உங்களுக்கு ராஜயோகம் தான்.

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி திங்கள். அதிர்ஷ்ட எண்: 6.
அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை. இந்த வார மதிப்பெண்: 90%.

(தொடர்ச்சி 22 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள்
## (வரலாறும் மரபும்)

---------------------------------------------

வரலாறும் மரபும்: 1214

---------------------------------------------



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் புதுக்கல்லடி, மட்டக்களப்பு

மட்டக்களப்பிலுள்ள புதுக்கல்லடி பிரதேசத்தில் ஆத்மார்த்தமாக முருகனை எண்ணி அமைக்கப்பட்ட ஆலயம், ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் எனப் பெயர் பெற்று, தமிழகத்திலுள்ள திருச்செந்தூரிலே எழுந்தருளியுள்ள முருகன் வடிவில் சிலையும் செய்து நிறுவப்பட்ட பின்னர் இவ்வாலயம் புகழ்பெற்ற ஆலயமாக விளங்கியது. தமிழகத்திலுள்ள திருச்செந்தூர் ஆலயத்திற்குச் செல்ல முடியாத பக்தர்கள், ஈழத்தின் பல பகுதிகளிலுமிருந்து இவ்வாலயத்திற்கு வந்து செல்வது வழக்கமாக இருந்தது.

தாம் வாழும் நாட்டின் பெயரையோ ஊரையோ கொண்டு ஆலயங்கள் எழுப்பப்படுவது வழக்கிலுள்ள முறையாகக் காணப்படுகின்றது. அதற்கு மாறாக, தமிழகத்திலுள்ள ஒரு ஆலயத்தின் பெயரைக் கொண்டு தாம் வாழ்ந்த பிரதேசத்திலே கோயில் எழுப்பியமை சற்று மாறுபாடாகக் காணப்பட்டது. இவ்வாறு திருச்செந்தூர் என்ற பெயரிலே ஆலயம் எழுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கோயில், தமிழகத்தின் தென்கிழக்குக்கோடியில் திருநெல்வேலியிலிருந்து சுமார் 56 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. முருகனின் ஆறுபடைவீடுகளில் இதுவும் ஒன்றாக விளங்குகின்றது. குன்றும், மலையும் முருகனுக்கு உகந்த இடமாகக் காணப்படும்பொழுது, திருச்செந்தூரில் அலைவீசும் கடற்கரையில் அழககாகக் குடிகொண்டுள்ளான்.

கடற்கரையில் கோயில்கொண்டுள்ள கலியுகப்பெருமானை புலவர்கள் பலரும் கண்ணாரக்கண்டு வாயாரப் போற்றி வணங்கியுள்ளனர். நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில், திருச்செந்தூரை இரண்டாவது படைவீடாகச் சிறப்பிக்கின்றார். அருணகிரிநாதரின் 84 திருப்புகழ் பாடல்கள், அழகான மயில்மீதமர்ந்த முருகப்பெருமானைப் போற்றுபவையாகக் காணப்படுகின்றன. பிறவியிலேயே ஊமையாகவிருந்த குமரகுருபரர், செந்திலம்பதியை அடைந்து பேசுந்திறன்பெற்று கதிர்வேலாயுதப்பெருமான் பேரில் கந்தர் கலிவெண்பாவாக கவிமழை பொழிந்துள்ளார். பகழிகூத்தர் என்பவர், திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்பாடி குறமகள் மணாளன் அருளால் அவருக்கிருந்த தீராதவயிற்றுவலிநோய் நீங்கப்பெற்று குணமடைந்தார்.

எழுத்தறிவற்ற ஆலய மடப்பள்ளி ஊழியரான வென்றிமலை என்பவர், அடியார்க்கு எளியவனான ஆறுமுகனின் திருவருளால் திருச்செந்தூர் தலபுராணம் பாடியுள்ளார். ஸ்ரீ ஆதிசங்கரர், செந்தில்நகர் வந்து செந்திலாண்டவனை வழிபட்டு, சண்முகன்பேரில் "ஸ்ரீசுப்ரமணியபுஜங்கம்" என்ற வடமொழி நூலைப் பாடியுள்ளார். புஜங்கம் என்றால் தோளால் நகர்ந்து செல்லக்கூடிய பாம்பு என்று பொருள். இச்சொல் வடமொழியில் ஒருவித யாப்பைக் குறிக்கும். இத்தகைய புஜங்கக் கவிச் சொற்கள், பாம்பு வளைந்து செல்வதுபோல் சரளமான வார்த்தைகளால் அமைந்துள்ள காரணத்தினால், இப்பாமாலைக்கு "புஜங்கம்" என்றபெயர் பொருந்துவதாயிற்று.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் தீராத காசநோயால் பீடிக்கப்பட்டபொழுது, சிவபெருமான் கனவிலே தோன்றி, "ஜெயவின் வடிவமாய்தோன்றும் செந்திற்குமரனை வழிபட்டால் உனது வியாதி நீங்கிவிடும்" என அருள் புரிந்தார். அதற்கமைய திருச்செந்தூர் என வழங்கும் ஜெயந்திபுரம் வந்து முருகப்பெருமானை வழிபட்டார். இவர் தரிசிக்கச் சென்றபொழுது, முருகனின்
திருவடிகளில் ஆதிசேடன் பூசை செய்துவருவதைக் கண்ணுற்றார். உடனே பாம்பு என்ற பொருள் கொண்ட வடமொழிச் சொல்லாகிய, "புஜங்கம்" என்ற வார்த்தையையே தலைப்பாகக் கொண்டு, முருகப்பெருமானுடைய திருவடிகளிலே வடமொழியில், முப்பத்திமூன்று கவிகளைக்கொண்ட பாமாலையை சூட்டினார். இதுவே திருச்செந்தூர் சுப்ரமணிய புஜங்கமாகும். இப் புஜங்கமாலையை அனைவரும் தமிழில் படித்துச் சுவைக்க உதவியாக, கோவை கவியரசு வித்துவான் கு.நடேசகவுண்டர் அவர்கள் தமிழில் தமிழ்ச்சுவை, பக்திச்சுவை பிசகாமல் கவியாக மொழிபெயர்த்துள்ளார்கள்.

குன்றுதோறாடும் குமரன் கடற்கரையில் எழுந்தருளியுள்ளமைக்கு புராண வரலாறு சான்றாகின்றது. தேவர்களைச் சிறைப்பிடித்த சூரபன்மனை அழித்து, அவன் உடலின் இருகூறுகளும் சேவலும், மயிலுமாக மாற, அவற்றை முருகன் ஏற்று மயிலை வாகனமாகவும், சேவலை கொடியாகவும் ஏற்று அருள் புரிந்தார். பின்னர் சூரசம்ஹாரம் முடிந்தபின் தன் தந்தையாகிய சிவனுக்குப் பூசை செய்ய விரும்பினார். அதற்காக தேவதச்சன் மயன் தமிழகத்து திருச்செந்தூர் கோயிலை உருவாக்கினார். கோயிலின் கருவறையில் பாலசுப்ரமணியன் சிவலிங்கத்திற்குப் பூசை செய்யும் கோலத்திலே காட்சியளிக்கின்றான். இக்காரணத்தினாலேயே இயற்கை அழிவுகள்கூட இக்கோயிலை அண்மிக்கவோ அழிக்கவோ முடியாதுள்ளது, இத்தகை பெருமை பல கொண்ட திருச்செந்தூர் முருகன், மட்டக்களப்பு புதுக்கல்லடியில், தனக்கு "ஒரு சிறு கொட்டிலாவது அமைத்துத் தா" என சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதியிடம் உவந்து கேட்டு எழுந்தருளியுள்ள திருத்தலமாக, ஈழத்துத் திருச்செந்தூர் ஆலயம் காணப்படுகின்றது. போக்குவரத்துக்கட்டுப்பாடுகள் காரணமாக தமிழக திருச்செந்தூர் சென்று வந்த மக்கள், ஈழத்து திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகனைத் தரிசிப்பதன் மூலம் தமது விருப்பத்தை நிறைவேற்றி வருகின்றனர்.

வளரும்..



# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** இந்த வாரம் உங்களுக்கு செவ்வாய் பலத்தால் மிகவும் வலிமையான வாரமாக அமையும். விருச்சிகம் ராசிக்காரங்களுக்கு இந்த வாரம் பணம் கொட்டும் வாரம். நீண்ட நாள் கடன் வசூல் ஆகும். புது வீடு வாங்கும் யோகம் உண்டு. மூத்த சகோதரரால் உதவி கிடைக்கும். சம்பளம் உயரும். வெளிநாட்டு பயணம் அமையும். எந்த வேலையிலும் ஜெயிப்பீங்க. அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. போட்டியில் வெற்றி பெறுவீங்க. பேச்சில் கவனம் தேவை. கடன் கொடுக்காதீங்க. முதல் இரண்டு நாள் லாபம், நடுவில் இரண்டு நாள் செலவு, கடைசி மூன்று நாள் ராஜயோகம். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும் லாபம் அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாடிக்கையாளர்கள் பெருகுவர். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும் மேலதிகாரிகள் பாராட்டுவர் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும் சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும் பிள்ளைகளால் பெருமை வரும் சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும். காதல் உறவு இனிக்கும். நண்பர்கள் உதவுவர். உடல்நலத்தில் சிறு சோர்வு தலைவலி வரலாம். நீர் அதிகம் பருகவும். ஓய்வு அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும். அரசு காரியங்கள் வெற்றியடையும். முருகன் வழிபாடு நன்மை தரும்.

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய் வியாழன். அதிர்ஷ்ட எண்: 9.
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. இந்த வார மதிப்பெண்: 92%.




**தனுசு:** இந்த வாரம் உங்களுக்கு குரு பலத்தால் மிகவும் சிறப்பான வாரமாக அமையும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும், புது வேலைக்கு முயற்சி பண்றவங்களுக்கு வேலை கிடைக்கும். தந்தை மூலம் உதவி கிடைக்கும். சொந்த தொழில் பண்றவங்களுக்கு லாபம் அதிகமாகும். புது வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டு தூக்கம் கெடும். வீண் அலைச்சல் இருக்கும். வெளிநாட்டு பயணம் அமையும். யாரிடமும் கோபமாக பேசாதீங்க. கோர்ட் கேஸ் ஜெயிப்பீங்க. அரசாங்க வேலை கிடைக்கும். பணம், பதவி, புகழ் மூன்றும் உங்களை தேடி வரும் வாரம். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும் லாபம் அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாடிக்கையாளர்கள் பெருகுவர். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும் சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை வரும். சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும் காதல் உறவு இனிக்கும், நண்பர்கள் உதவுவர். உடல்நலத்தில் சிறு சோர்வு தலைவலி வரலாம் நீர் அதிகம் பருகவும். ஓய்வு அவசியம். கார உணவை தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும் அரசு காரியங்கள் வெற்றியடையும். தெய்வ வழிபாடு நன்மை தரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு மிகவும் சிறந்தது.

அதிர்ஷ்ட நாள்: வியாழன் வெள்ளி. அதிர்ஷ்ட எண்: 3.
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். இந்த வார மதிப்பெண்: 93%.




**மகரம்:** இந்த வாரம் உங்களுக்கு சனி பலத்தால் மிகவும் உறுதியான வாரமாக அமையும். அதிர்ஷ்டம் கொட்டும் வாரம். தந்தை மூலம் உதவி, பூர்வீக சொத்து கைக்கு வரும். வெளிநாட்டில் இருந்து நல்ல செய்தி வரும். கோவில் குளம் என்று புண்ணிய பயணம் போவீங்க. வேலையில் இருந்த தடை விலகும். பதவி உயர்வு, சம்பள உயர்வு தேடி வரும். சொந்த தொழில் பண்றவங்களுக்கு லாபம் இரட்டிப்பாகும். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பெரிய மனிதர்கள் நட்பு கிடைக்கும். நீண்ட நாள் கடன் வசூல் ஆகும். புது வீடு, வாகனம் வாங்குவீங்க. பங்கு சந்தையில் லாபம் வரும். முதல் 6 நாள் செம ஜாலி, கடைசி நாள் மட்டும் பொறுமை தேவை. தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக்கையாளர்கள் பெருகுவர். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும். சேமிப்பு உயரும். வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை வரும். சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும். காதல் உறவு இனிக்கும். உடல்நலத்தில் சிறு சோர்வு கால்வலி வரலாம். நீர் அதிகம் பருகவும். ஓய்வு அவசியம். கார உணவை தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும். அரசு காரியங்கள் வெற்றியடையும். தெய்வ வழிபாடு நன்மை தரும். சனீஸ்வர வழிபாடு மிகவும் சிறந்தது.

அதிர்ஷ்ட நாள்: சனி செவ்வாய். அதிர்ஷ்ட எண்: 8.
அதிர்ஷ்ட நிறம்: நீலம். இந்த வார மதிப்பெண்: 85%.




**கும்பம்:** இந்த வாரம் உங்களுக்கு சனி பலத்தால் மிகவும் சாதகமான வாரமாக அமையும். கோர்ட் கேஸ் ஜெயிப்பீங்க. நோய் நொடி விலகும். போட்டியில் வெற்றி கிடைக்கும். மாமா வழியில் உதவி கிடைக்கும். தந்தை சொத்து கைக்கு வரும். புரமோஷன் கிடைக்கும். வெளிநாட்டு பயணம் அமையும். குலதெய்வ அருள் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும் மேலதிகாரிகள் பாராட்டுவர் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். சொந்த தொழிலில் லாபம் பல மடங்கு ஆகும். அரசாங்க வேலை கிடைக்கும். பெரிய மனிதர்கள் உதவுவார்கள். நண்பர்கள் மூலம் பெரிய லாபம். புது வீடு வாங்குவீங்க. ஷேர் மார்க்கெட்டில் லாபம் வரும். காதல் ஜெயிக்கும். மொத்தத்தில் இந்த வாரம் முழுக்க உங்களுக்கு ராஜயோகம் தான். எந்த தடையும் இல்லை. எடுத்த காரியம் எல்லாம் வெற்றி தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக்கையாளர்கள் பெருகுவர். பணவரவு தாராளமாக இருக்கும். சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை வரும். சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும். காதல் உறவு இனிக்கும். நண்பர்கள் உதவுவர். உடல்நலத்தில் சிறு சோர்வு வரலாம். நீர் அதிகம் பருகவும். ஓய்வு அவசியம். கார உணவை தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும். அரசு காரியங்கள் வெற்றியடையும். தெய்வ வழிபாடு நன்மை தரும். ஆஞ்சநேயர் வழிபாடு மிகவும் சிறந்தது.

அதிர்ஷ்ட நாள்: சனி திங்கள். அதிர்ஷ்ட எண்: 8.
அதிர்ஷ்ட நிறம்: நீலம். இந்த வார மதிப்பெண்: 87%.




**மீனம்:** இந்த வாரம் உங்களுக்கு குரு பலத்தால் மிகவும் அதிர்ஷ்டமான வாரமாக அமையும். கூட்டு தொழில் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். வெளியூர் பயணம் செல்லும் யோகம் உண்டு. புதிதாக கடன் வாங்காதீர்கள் யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடாதீர்கள். எதிரிகள் தொல்லை தரலாம். வாகனம் ஓட்டும்போது மிகவும் கவனமாக இருக்கவும். பூர்வீக சொத்து கைக்கு வரும். தந்தை மூலம் பெரிய உதவி கிடைக்கும். கோவில் பயணம் செல்வீர்கள். பதவி உயர்வு சம்பள உயர்வு உறுதியாகும் அரசாங்க வேலை கிடைக்கும். சொந்த தொழிலில் பல மடங்கு லாபம் வரும். கோர்ட் வழக்கில் வெற்றி கிடைக்கும். பண வரவு அதிகரிக்கும். சேமிப்பு உயரும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பெண்களுக்கு நகை வாங்கும் யோகம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் அதிகரிக்கும். விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கும். வியாபாரிகளுக்கு புதிய ஒப்பந்தம் கிடைக்கும். இந்த வாரம் முழுவதும் குரு பார்வையால் தடைகள் விலகும். நன்மைகள் பெருகும். சந்தோஷம் நிலைக்கும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாடிக்கையாளர்கள் பெருகுவர். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும் சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை வரும். சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும். காதல் உறவு இனிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும். அரசு காரியங்கள் வெற்றியடையும். தெய்வ வழிபாடு நன்மை தரும்.

அதிர்ஷ்ட நாள்: வியாழன் வெள்ளி. அதிர்ஷ்ட எண்: 3.
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். இந்த வார மதிப்பெண்: 90%.




# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

,t;tplj;jpy;
tpsk;guk; nra;a *$30.00* kl;LNk!
416-752-1524




29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

,t;tplj;jpy;
tpsk;guk; nra;a vk;ik
mioAq;fs;
416-752-1524

உதயம் 1589 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 18, 2026

# கனடாவில் 25ம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ள "ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா – 2026 ஐ சிறப்பிக்க ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட "டோரதி" திரைப் படக்குழுவினர்



கனடா வாழ் செந்தூரன் நடராஜா அவர்களை நிறுவனராகக் கொண்டு ஆரம்பிக்கப்பெற்று அதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 25ம் திகதி தொடக்கம் மார்க்க்ம் நகரில் யோர்க் சினிமாவில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ள "ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா-2026 ஐ சிறப்பிக்கும் வகையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட "டோரதி" திரைப் படக்குழுவினர் அனைவரையும் உற்சாகப்படுத்தியும் மகிழ்வித்து அங்கு சில மணிநேரங்கள் தமிழ்க் கனடியர்களோடு ஊடக நண்பர்களோடும் உரையாடி மகிழ்ந்தனர். (தொடர்டச்சி 10ம் பக்கம்)

# ChiDAES-Canada கிழக்கிலங்கை மாணவர் கல்வி மேம்பாட்டுக்காக நிறுவப்பட்ட அமைப்பின் 21வது ஆண்டு ஒன்றுகூடலில் சமூக சேவை விருதுகளையும் வழங்கியது

கனடாவில் வாழும் கிழக்கிலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட சமூக அக்கறை கொண்ட புத்திஜீவிகள் இணைந்து ஆரம்பித்த ஊாறையுநுளு-ஊயயெனய -என்று அழைக்கப்பெறும் கிழக்கிலங்கை மாணவர் கல்வி மேம்பாட்டுக்காக நிறுவப்பட்ட அமைப்பின் 21வது ஆண்டு ஒன்றுகூடலில் சமூக சேவை விருதுகளையும் வழங்கி மேலும் மாணவர்களின் நலன்களைக் கவனிக்க நிதிசேர் ஏலம் இடும் நிகழ்வையும் நடத்தியது.

மேற்படி வைபவத்தை பல நோக்கங்களுடன் நடத்துவதில் அமைப்பின் தலைவர் விஜயரட்ணம் அவர்கள் செயலாளர் சசி சசீந்திரன் அவர்கள் மற்றும் பொருளாளர் ஜீவா மாணிக்கம் அவர்கள் மற்றும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்கள் அவர்களுடன் அனைவரதும் குடும்ப உறுப்பினர்கள் என அனைவரும் ஒன்றிணைந்த இந்த சமூக நோக்கம் கொண்ட ஒரு மாலை ஒன்றுகூடலை சிறப்பாக நடத்தினர். (தொடர்டச்சி 4ம் பக்கம்)




# மன்னார் – முல்லைத்தீவு தனியார் பேருந்தில் தவறவிட்ட நகை மற்றும் பணப்பை ஆகியவற்றை மீட்டு ஒப்படைத்த சாரதி, மற்றும் நடத்துனர் கௌரவிக்கப்பெற்றனர்.



மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்தில் இருந்து 16ம் திகதி அன்று புதன்கிழமை முல்லைத்தீவிற்கு பயணிகளுடன் சென்ற தனியார் பேருந்து ஒன்றில் பெண் ஒருவர் பெறுமதியான நகை மற்றும் பணத்துடன் தவறவிட்ட பணப்பையை கண்டெடுத்தது ஒப்படைத்த குறித்த தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகிய இருவரும் 17ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து கௌரவிக்கப்பெற்றுள்ளனர்.
(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# ஈழத் தமிழினத்தின் அணையாத "விடுதலைத் தீ" திலீபன் என்னும் "பெருமகன்"



"திலீபனின் உண்ணாவிரத நாட்கள் கடந்தோடிய போதும் அந்தக் கோரிக்கைகள் எதுவும் காந்தி தேசத்தினால் நிறைவேற்றப்படவில்லை. உடல் வலிமை குன்றிய போதிலும் திலீபனின் மனவலிமை வானளவு உயர்ந்து நின்றது. ஆனால் காந்தி தேசம் தமிழருக்கு பெரும் துரோகம் இழைத்தது. 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை அன்று, தியாகப்பயணத்தின் பன்னிரெண்டாவது நாள், சரியாகக் காலை 10.48 மணிக்கு திலீபன் உயிர் பிரிந்தது . அமைதிப் படை என்ற போர்வையில் எமது இனத்தை அழிக்க வந்த இந்திய வல்லாதிக்க அரசின் முகத்திரையைக் கிழித்தெறிந்து அறவழிப் போரிற்கு புது இலக்கணம் வகுத்தான் திலீபன்.

பாரத தேசம் தன் வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்கவிட்டபோது, தன் உயிரையே சாட்சியமாக்கி நீதி கேட்ட அந்த மாவீரனின் தியாகம், ஒவ்வொரு தமிழனின் மூச்சுக் காற்றிலும் இன்னமும் கலந்திருக்கிறது. "மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழ் ஈழம் மலரட்டும்" என்ற அவனின் இறுதி வரிகள், வெறும் வார்த்தைகள் அல்ல. தலைமுறைகள் தாண்டி ஒலிக்கும் தமிழின விடுதலைக்கான அழைப்பு""--------கே.பாலா
(தொடர்ச்சி 9ம் பக்கம்)